# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 – 2023

| | | |
|---|---|---|
| மானியக் கோரிக்கை எண். 41 | – | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை |
| மானியக் கோரிக்கை எண். 51 | – | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |


**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**

வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
| --- | --- |
| முன்னுரை | 1-5 |
| வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | 6-91 |
| நில நிருவாகம் | 92-143 |
| நிலச் சீர்திருத்தம் | 144-172 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 173-184 |
| நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் | 185-218 |

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022-23

### 1. முன்னுரை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நிருவாகத் துறைகளின் அமைப்பில் பாரம்பரியம் மிக்க மூத்த துறையாகும். நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்குவதுடன், சீரான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரும்பங்காற்றுவது வருவாய் துறையாகும். இத்துறை மாநிலம் முழுமைக்கும் நன்கு வரையறுக்கப்பட்ட நிருவாக அமைப்பினை கொண்டுள்ளதால், அரசின் பல்வேறு சமூக பொருளாதார திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான நிலங்களின் பாதுகாவலன் என்ற வகையில், நில ஒப்படை, நில எடுப்பு, நில உரிமை மாற்றம், வீட்டுமனைப் பட்டா

வழங்குதல், நில உச்சவரம்பு, நகர்ப்புற நிலவரி வசூலித்தல் போன்ற பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

புயல், வெள்ளம், வறட்சி, பூகம்பம், நிலச்சரிவு, ஆழிப்பேரலை, கோவிட்–19 பெருந்தொற்று போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், அத்தியாவசியப் பொருட்கள், நிதி உதவி போன்ற பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. பொது மக்களுக்கு தேவையான பல்வேறு வகையான சான்றிதழ்கள் வழங்குதல், முதியோர், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவை, ஏழை விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல், குடும்ப துயர் துடைப்பு திட்டம் மற்றும் விபத்து நிவாரண திட்டம் ஆகிய



திட்டங்களின் கீழ் உரிய நிவாரணம் வழங்குதல் போன்ற பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், படைக்கலன் சட்டம் மற்றும் வெடிபொருள் சட்ட விதிகளின் கீழ் உரிமம் வழங்குதல் ஆகிய பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

இவைத் தவிர வாக்காளர் பட்டியல் தயாரித்தல், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்துவதில் இத்துறை பெரும்பங்காற்றுகிறது.

வருவாய்த் துறையின் வரலாறு, ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களிலிருந்து துவங்குகிறது. துவக்கத்தில், வருவாய் வாரியம் மைய அதிகார அங்கமாக இருந்தது. பின்னர் சிறப்பு சேவைகளுக்கான தேவை அதிகரித்து வந்ததால், பல்வேறு துறைகள் உருவாக்கப்பட்டு தனித்துறைகளாக செயல்படத் தொடங்கின. நில

வருவாய் மற்றும் நில நிருவாகம் தொடர்பான பணிகளை வருவாய் வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்த அமைப்பு 1980 வரை தொடர்ந்தது. 1980–இல் வருவாய் வாரியம் கலைக்கப்பட்டு, அதன் செயல்பாடுகள் பின்வரும் 5 ஆணையரகங்களுக்கு தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டு இத்துறை செயல்பட்டு வருகிறது.

i. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
ii. நில நிருவாக ஆணையரகம்,
iii. நிலச் சீர்திருத்த ஆணையரகம்,
iv. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்,
v. நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம்

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு நிருவாகத்தில் உதவி புரிய மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை ஆட்சியர்கள், நில



அளவை உதவி இயக்குநர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

வரவு செலவு திட்ட ஒதுக்கீடு : கோரிக்கை எண் 41, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான வரவு செலவுத் திட்டம் 2022–2023 ஆம் நிதி ஆண்டில் ரூ 7,474.94 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 2. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

**2.1** வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட நிருவாகத்திற்கான மேற்பார்வை அலுவலராகவும், வருவாய் அலுவலர்கள் மாவட்ட அளவில் மேற்பார்வை அலுவலர்களாகவும் செயல்படுகிறார்கள். வருவாய் நிருவாக ஆணையர், மாநில நிவாரண ஆணையராகவும் பேரிடர் மேலாண்மை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து செயல்பட நியமிக்கப்பட்டுள்ளார்,

**2.2** இத்துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகள் பின்வருமாறு:–

i. பொது வருவாய் நிருவாகம்

ii. நில வருவாய் வசூல்

iii. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்துதல்

iv. சான்றுகள் வழங்குதல்



v. குறைத்தீர்க்கும் வழிமுறைகள்

vi. பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்

vii. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு

viii. கீழ்க்கண்ட சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம் செய்தல்

- அ. வருவாய் வசூல் சட்டம் 1864
- ஆ. புதைப்பொருள் சட்டம் 1878
- இ. தமிழ்நாடு வெடிபொருள் சட்டம் 1884
- ஈ. தமிழ்நாடு அடகு பிடிப்போர் சட்டம் 1943
- உ. பொதுக் கட்டிட உரிமம் சட்டம் 1965
- ஊ. தமிழ்நாடு பிறப்பு / இறப்பு பதிவுச் சட்டம் 1969
- எ. தமிழ்நாடு அதிக வட்டிக்கு கடன் கொடுப்பதை தடுத்தல் சட்டம் 2003
- ஏ. படைக்கல உரிமைச் சட்டம் 1959
- ஐ. பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005

**2.3 மாவட்ட நிருவாகம்**

மாநிலத்தில் தற்போது 38 மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட

ஆட்சியர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல்வேறு துறைகளின் பிற மாவட்ட அளவிலான அலுவலர்கள் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட நீதிபதியின் ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

**2.4 வருவாய் கோட்ட நிருவாகம்**

நிருவாக வசதிக்காக, ஒவ்வொரு மாவட்டமும் சார் ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் வருவாய் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 94 வருவாய் கோட்டங்கள் உள்ளன.

**2.5 வருவாய் வட்ட நிருவாகம்**

வட்ட நிருவாகம் வட்டாட்சியரின் தலைமையில் இயங்கி வருகிறது. பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் வருமானம், இருப்பிடம், வாரிசு மற்றும் இதர இணையவழி சான்றுகள் தொடர்பான சேவைகள் வழங்குவதில்



வட்டாட்சியருக்கு, துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவுகின்றனர். மாநிலத்தில் தற்போது 313 வட்டங்கள் உள்ளன.

**2.6 குறுவட்ட நிருவாகம்**

ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள சில வருவாய் கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பிர்க்கா என்று அழைக்கப்படும் வருவாய் அலுவலர் நிலவரி வசூல் பணியிலும், கிராம நிருவாக அலுவலர்களின் பணியினை மேற்பார்வையிடுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறார். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1195 குறுவட்டங்கள் உள்ளன.

**2.7 வருவாய் கிராம நிருவாகம்**

கிராம நிருவாக அலுவலர்கள் வருவாய் நிருவாகத்தின் அடிப்படை மற்றும் ஆணிவேர்களாக செயல்படுகின்றனர். கிராம நிருவாக அலுவலர்களால் கிராமக் கணக்குகளைப் பராமரித்தல், நிலவரி வசூல்

செய்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது, தமிழ்நாட்டில் 16,743 வருவாய் கிராமங்கள் உள்ளன.

## 2.8 வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பு

வருவாய் நிருவாக அலுவலக ஆணையர் அலுவலகத்தில் 431 அலுவலர்கள்/ பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகத்தின் கீழ் 52,594 அலுவலர்கள்/பணியாளர்கள் உள்ளனர் (மாவட்டம் முதல் கிராமம் வரை).

## 2.9 நில வருவாய்

அரசாணை (நிலை) எண்.544, வருவாய் (வ.நி.1(1)) துறை, நாள் 20.10.2010 –இன்படி தமிழ்நாட்டில் உள்ள நிலங்களுக்கு அவற்றின் வகைபாட்டிற்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு நிலவரி தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:–



**அட்டவணை 2.1**

| வ. எண் | விவரம் | தொகை / ஏக்கர் |
|---|---|---|
| 1. | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.2/– |
| 2. | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/– |
| 3. | ஆட்சேபணையற்ற அரசுபுறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.5/– |
| 4. | பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை | ரூ.1/– |

ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜூலை 1–ஆம் தேதி முதல் ஜூன் 30–ஆம் தேதி வரை நிலவரி வசூலிக்கப்படுகிறது.

## 2.10 வருவாய் கட்டடங்கள்:

அரசின் பெரும்பாலான நலத்திட்டங்கள் வருவாய்த்துறை மூலமாகவே பொதுமக்களை சென்றடைகிறது. அந்நலத்திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயனடைய ஏதுவான அலுவலக சூழலை மேம்படுத்தும் பொருட்டு,

மாவட்ட ஆட்சியர் நிலை முதல் கிராம நிருவாக அலுவலர் நிலை வரை அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் விதமாக அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாக பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கு, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் அமைத்திட, மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தல் கிராமத்தில் 8.57.0 ஹெக்டேர் நிலத்தினை கிரயம் செய்திட ஏதுவாக ரூ.10.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண்.765 வருவாய் மற்றும் பேரிடர்




மேலாண்மைத் (வநி 1(2)) துறை, நாள் 20.11.2021–இல், அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்கு ரூ.114.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை (நிலை) எண்.747 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (வநி 1(2)) துறை, நாள் 16.11.2021–இல், அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது மாவட்ட பெருந்திட்ட வளாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2.11 சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள்,

விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த ஆதரவற்ற திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத்தொகையாக ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. 2022-23-ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4816.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2022 அன்று உள்ள பதிவுகளின்படி 34,52,758 பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.





## அட்டவணை-2.2

**ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் நிதி பங்கீடு**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒன்றிய அரசின் பங்கீடு ரூ | மாநில அரசின் பங்கீடு ரூ |
|---|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | 200/- | 800/- |
| | | 500/- | 500/- |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 700/- |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 700/- |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | - | 1000/- |



| | | | |
|---|---|---|---|
| 7 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |

**முகாம் வாழ் இலங்கை தமிழர் ஓய்வூதியத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியம் மற்றும் மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/- என முகாம் வாழ் இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**தகுதிகள்**

தேசிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மூன்று

ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெற நிபந்தனைகள் பின்வருமாறு:–

**அட்டவணை 2.3**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் வயது – 60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாகஇருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர். வயது – 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 3 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் வயது – 18 மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை – 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூகப்



பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற பின்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்:–

**அட்டவணை –2.4**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | வேலையற்றவராக இருத்தல் வேண்டும்.தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது – 18 மற்றும் அதற்கு மேல் ஊனம் நிலை – 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். |
| 2. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.வயது – 18 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது –60 மற்றும் அதற்கு மேல் |

| | | |
|---|---|---|
| | | நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது —30 மற்றும் அதற்கு மேல் சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்(மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |



| | | |
|---|---|---|
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற திருமணமாகாதபெண்ணாக இருத்தல் வேண்டும். வயது —50 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |

## 2.12 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற விரும்புவோர் இணைய வழியில் சமர்ப்பிக்க ஏதுவாக எளிய ஒரு பக்க வடிவமைப்பை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயல்படுத்தியுள்ளது. இவ்விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு

கணினி மூலம் சரிபார்ப்புக்காக அனுப்பப்படும். சரிபார்ப்புக்குப் பிறகு தகுதியுள்ள மனுக்கள் உயர் அலுவலர்களின் ஆய்வு மற்றும் ஓய்வூதிய ஆணை பெறுவதற்கு அனுப்பப்படும். தகுதியுள்ள மனுதாரருக்கு வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

மேலும், பயனாளிகள் கீழ்காணும் விதிமுறைகளின்படி சன்னரக அரிசியை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்:–



அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்னரக அரிசியும்

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்னரக அரிசியும் வழங்கப்படுகிறது.

**2.13 நிவாரணத் திட்டங்கள் விபத்து நிவாரணத் திட்டம்**

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் வருவாய் ஈட்டும் பிரதான நபர் 18 முதல் 59 வயதிற்குள்ளாக இருப்பவர்கள், 44 அறிவிக்கப்பட்ட தொழில்களில் ஈடுபட்டோர், விபத்தில் மரணம் அடைந்துவிட்டால், இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக இறந்த நபரின் குடும்பத்திற்கு ரூ.20,000/– வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசின் 100 சதவிகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**நலிந்தோர் நிவாரணத் திட்டம்**

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் வருவாய் ஈட்டும் பிரதான நபர் இயற்கை மரணம் அடைந்துவிட்டால், தேசிய குடும்ப நல நிதியுதவிதிட்டத்தின் கீழ் நிவாரணத் தொகையாக இறந்த நபரின் குடும்பத்திற்கு ரூ.20,000/-வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசின் 100 சதவிகித நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.14 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்**

நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து மிகுந்த துன்பங்களை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென அரசு பல நலத்திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு மாநில விடுதலைப்



போராட்ட தியாகிகள் ஓய்வூதியத் திட்டத்தை 01.10.1966 முதல் செயல்படுத்தி வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமானது அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. 75-ஆவது சுதந்திர தினமான 15.08.2021 அன்று விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இவ் ஓய்வூதியத் தொகை மாதத்திற்கு ரூ.17,000/-லிருந்து ரூ18,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் குடும்ப ஓய்வூதியத் தொகை மாதத்திற்கு ரூ.8,500/- லிருந்து ரூ.9,000 /- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றி, பெருமை பெற்றவர்களின் தியாகத்தைப் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில், அவர்களது

வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, மருதுபாண்டியர் சகோதரர்களின் 90 வழிதோன்றல்கள், வீரபாண்டிய கட்டபொம்மனின் 3 வழிதோன்றல்கள், முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் 52 தகுதியான வழிதோன்றல்கள் மற்றும் சுதந்திர போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் ஒருவர் ஆகியோருக்கு ஒவ்வொரு மாதமும் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்பு ஓய்வூதியம் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வழிதோன்றல்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படும்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும்



ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:–

**மருத்துவ வசதிகள்**

ஒன்றிய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வழங்கப்பட்டு வருகிறது.விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவ சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளில் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சையும் வழங்கப்படுகிறது.

## போக்குவரத்து வசதி மற்றும் வீட்டு வசதி

ஒன்றிய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகள் மற்றும் ஓய்வூதியம் பெற்று வரும் வாரிசுகளுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யவும் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி குடியிருப்புகளில், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகிறது.மேலும், 60 வயதிற்கு மேற்பட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் அவர்தம் வாரிசுதாரர்கள் உடன் செல்லும் உதவியாளர் ஒருவருக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக கட்டணமில்லா பயண அட்டை வழங்கப்படுகிறது.



## வேலை வாய்ப்பில் முன்னுரிமை

வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலை வாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும் போது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுவருகிறது.

## ஈமச்சடங்குச் செலவு

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச்சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.5000/– வழங்கப்படுகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த்துறை

அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.மாநில அரசின்/ ஒன்றிய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும். தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களை பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:–

<u>அட்டவணை–2.5</u>

| வ. எண் | ஓய்வூதிய வகைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள்(மாதமொன்றிற்கு ரூ.18,000/– மற்றும் ரூ.500/– மருத்துவப்படி) | 89 |
| 2 | மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.9,000/– மற்றும்ரூ.500/– மருத்துவப்படி) | 872 |
| 3 | மருதுபாண்டியர் சகோதரர்களின்வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.9,000/– வீதம்) | 90 |
| 4 | வீரபாண்டிய கட்டபொம்மன் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.9,000/– வீதம்) | 3 |
| 5 | முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாதசேதுபதியின்வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.9,000/– வீதம்) | 52 |
| 6 | சுதந்திர போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் (மாதமொன்றிற்கு ரூ.8,500/– வீதம்) | 1 |
| 7 | ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திர போராட்ட தியாகிகள் (ஓய்வூதியம் ரூ.500/– + மருத்துவப் படி ரூ.500/–) | 278 |
| 8 | ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திர போராட்ட தியாகிகளின் குடும்ப ஓய்வூதியம் (ஓய்வூதியம் ரூ.500/– + மருத்துவப்படி ரூ.500/–) | 520 |
| | **மொத்தம்** | **1905** |



மேலும், ஒன்றிய அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம்

பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, மாதமொன்றிற்கு ரூபாய் 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2022-2023 நிதியாண்டில் ரூ.15.60 கோடி மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.15 வட்ட அலுவலகங்களில் குறை தீர்க்கும் தகவு**

அனைத்து வட்டாட்சியர், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பெறப்படும் பொதுமக்களின் குறை தீர்வு மனுக்களின் நிலை குறித்து இணையதளம் மற்றும் குறுஞ்செய்தி மூலம் அறியவும், அம்மனுக்களுக்கு தீர்வு காணவும் மாநில அளவில் வலைத்தளம் அடிப்படையிலான மென்பொருள் ஒன்று Taluk Online Monitoring System (TOPMS) அனைத்து வட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



01.04.2021 முதல் 31.03.2022 வரை மாநில அளவில் 42,40,918 மனுக்கள் பெறப்பட்டு 39,90,653 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

**2.16 வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம்-2022**

2022-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு, வேட்டிகளும், சேலைகளும் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.484.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1.80 கோடி சேலைகளும், 1.80 கோடி வேட்டிகளும் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.17 மக்கள் தொடர்பு முகாம்**

பொதுமக்களின் குறைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் மக்கள் தொடர்பு முகாம் திட்டம் 1969-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக

தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன் கிழமைகளில் நடத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வருவாய்த்துறையுடன், வேளாண்மை, தோட்டக்கலை, சுகாதாரம், கால்நடை மற்றும் சமூக நலம் ஆகிய இதர துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் ஒரு குழுவாக சென்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும்.

இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாக செயல்படுத்த, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வருவாய் கோட்ட அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று



தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதற்காக, மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பெறப்பட்ட மனுக்கள் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் அனைத்தும் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 2.18 மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள்

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் ஒவ்வொரு மாதமும் வருவாய்க் கோட்ட நிலை அலுவலர்களாலும்,

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருவாய் நிருவாக ஆணையராலும் நடத்தப்பட்டு வருகிறது.

**2.19 மின்னணு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையினை நாடி வரும் பொதுமக்களுக்கு விரைவான இணையவழி சேவையினை அனைத்து மாவட்டங்களிலும் அளித்திடும் வகையில், தகவல் தொழில் நுட்பவியல் துறை மற்றும் தேசிய தகவல் மையமும் இணைந்து செயல்படுகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மின் ஆளுமைத் திட்டம் வாயிலாக பின்வரும் சான்றிதழ்கள் / உரிமங்கள் வழங்கப்பட்டு வருகிறது:–

1. சாதி சான்றிதழ்
2. இருப்பிடச் சான்றிதழ்
3. வருமான சான்றிதழ்



4. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ்
5. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ்
6. விவசாய வருமான சான்றிதழ்
7. கலப்புத் திருமண சான்றிதழ்
8. விதவைச் சான்றிதழ்
9. வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்
10. குடிபெயர்வு சான்றிதழ்
11. சிறு / குறு விவசாயி சான்றிதழ்
12. இயற்கை இடர்பாடுகளினால் இழந்த பள்ளி கல்லூரி சான்றிதழ்களின் நகல் பெற சான்றிதழ்
13. திருமணமாகாதவர் என்பதற்கான சான்றிதழ்
14. ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்
15. வாரிசு சான்றிதழ்
16. வசிப்பிடச் சான்றிதழ்
17. சொத்து மதிப்பு சான்றிதழ்
18. அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்
19. கடன்கொடுப்போர் உரிமம்

20. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்
21. பொருளாதாரரீதியில் பின்தங்கியவர் என்பதற்கான சான்றிதழ் (வருமானம் மற்றும் சொத்து)
22. ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்
23. ஜெயின் மதத்தினர் என்பதற்கான சிறுபான்மையினர் சான்றிதழ்
24. பொது கட்டிட உரிமம் குறித்த சான்றிதழ்
25. தற்காலிக பட்டாசு உரிமம் குறித்த சான்றிதழ்

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலங்களில் 88,98,334 வருவாய்த்துறை சான்றிதழ்கள் இ-சேவை மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.20 வருவாய்த்துறை உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்கு புதிய வாகனங்கள் வழங்குதல்**

2021-2022 ஆம் நிதியாண்டில் மாவட்டங்களில் உள்ள முக்கியப் பிரமுகர்கள்



மற்றும் வருவாய்த்துறை உயர் அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் கொள்முதல் செய்ய மொத்தம் ரூ. 1.05 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2.21 பேரிடர் மேலாண்மை:**

காலநிலை மற்றும் புவியியல் காரணங்களால் ஏற்படும் பேரழிவுகளான புயல், வெள்ளம், பூகம்பம், சுனாமி மற்றும் வறட்சி ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய இந்திய தீபகற்ப பகுதியில் தமிழ்நாடு அமைந்துள்ளது. மாநிலத்தின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 14 மாவட்டங்கள்

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் வங்காள விரிகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வுநிலை (Trough) மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் (Depression) போன்றவற்றின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. மேலும் தமிழகத்தின் புவியியல் அமைப்பானது மின்னல், நிலச்சரிவு, காட்டுத்தீ, கடல் அரிப்பு போன்ற பேரிடர்கள் இயல்பாக ஏற்பட வழிவகுக்கிறது. இந்த பேரிடர்களை கையாள்வது மிகவும் கடினமானது என்பதுடன், பேரிடர் ஆயத்த நிலை, மீட்பு, மறுசீரமைப்பு மற்றும் அபாயத் தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.






| பேரிடர் | வருடம் |
|---|---|
| வெள்ளம் | 1977,1985,1996,1997,1998,2005,2007,2008,2010, 2011,2015 & 2021 |
| புயல் | 1977,1991,1992,1993,2000,2008,2011,2016,2017, 2018 & 2020 |
| வறட்சி | 1987,1988,1995,2001,2002,2003,2004,2012,2016 & 2019 |
| நிலச்சரிவு (குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில்) | 1993,2009 & 2019 |
| சுனாமி | 2004 |

## 2.22 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்:

மாநிலத்தில் பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திடவும் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள் தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

தலைமையில் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் பின்வரும் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது.

1. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
2. அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி உறுப்பினர்
3. செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை
4. செயலாளர், நிதித்துறை
5. செயலாளர், உள்துறை
6. செயலாளர், உயர் கல்வித் துறை
7. செயலாளர், பள்ளிக் கல்வித் துறை
8. வருவாய் நிருவாக ஆணையர்
9. இயக்குநர், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையம்,
   அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
10. தலைவர், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்ப கழகம் சென்னை.





*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் 5.7.2021 அன்று நடைபெற்றது*

**2.23 மாநில செயலாக்கக் குழு:**

மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவிடும் வகையில், தமிழக அரசின் தலைமைச் செயலாளரை தலைவராகவும், நிதித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்துறை ஆகிய துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில செயலாக்கக் குழு

அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் கூட்டத்தில் வருவாய் நிர்வாக ஆணையர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வருகிறார். பேரிடர் மேலாண்மை தொடர்பான நிதியை கையாள்வது குறித்து மாநில அரசுக்கு இக்குழு ஆலோசனை வழங்குவதோடு, பேரிடர் காலங்களில் உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.

**2.24 மாநில ஆலோசனைக் குழு:**

மாநில ஆலோசனைக்குழு, வருவாய் நிருவாக ஆணையரை தலைவராகக் கொண்டும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கிய இக்குழு, பேரிடர்



அபாயக் குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**2.25 பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பு:**

பேரிடர்களின் போது அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து உடனடி மீட்பு நடவடிக்கைகளின் மூலம் மக்கள் மற்றும் அவர்களது உடைமைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் பேரிடர் நிகழ்வு மீட்பு அமைப்பினை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநில அளவில் இவ்வமைப்பின் இன்சிடன்ட் கமாண்டராக வருவாய் நிருவாக ஆணையர் செயல்படுவதோடு, இன்சிடன்ட் கமாண்டருக்கு உதவிபுரிய துணை இன்சிடன்ட் கமாண்டராக இயக்குநர், பேரிடர் மேலாண்மை செயல்பட்டு வருகிறார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர்கள் இன்சிடன்ட் கமாண்டராக செயல்பட்டு வருகின்றனர்.

**2.26 தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை:**

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை செயல்படுகிறது. இம்முகமையின் ஆட்சிமன்றக்குழு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் வழிநடத்தப்படுகிறது. மேலும், வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் இம்முகமையின் செயலாக்க குழுவின் தலைவராகவும், பேரிடர் மேலாண்மை இயக்குநர் முதன்மை செயலாக்க அலுவலர் / உறுப்பினர் செயலராகவும் செயல்பட்டு வருகின்றனர். பேரிடர் அபாயக் குறைப்பிற்காக மாநில அரசால் செயல்படுத்தப்படும் மீட்பு மற்றும் நிவாரணம், மறுசீரமைப்பு, தயார் நிலை மற்றும் திறன் மேம்பாடு, தணிப்பு நடவடிக்கைகள்



ஆகியவற்றை தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை ஒருங்கிணைந்து செயல்படுத்துகிறது.

**2.27 மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்:**

தமிழநாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமானது, மத்திய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**2.28 பேரழிவு அபாயக் குறைப்புக்கான உலகளாவிய மற்றும் தேசிய கட்டமைப்புகள்**

சென்டாய் கூட்டமைப்பின் பேரிடர் அபாயக் குறைப்பு கோட்பாடுகள் (2015 – 2030),

பருவமாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை (2015), நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (2015 – 2030), பேரிடர் அபாயக் குறைப்பு குறித்து பாரதப் பிரதமரின் 10 அம்சத்திட்டம், தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2019, ஆகியவை பேரிடர் அபாயக் குறைப்புக்கான கோட்பாடுகளை வழங்குகின்றன. தமிழ்நாட்டின் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள், மேற்கூறிய கோட்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதன் மூலம் பேரிடர் அபாயத்திலிருந்து மீள் தன்மையுடைய கிராமம், நகரம், பெருநகரம் மற்றும் மாநிலம் என்ற இலக்கினை அடைய, உலகளாவிய மற்றும் தேசிய பேரிடர் அபாயக் குறைப்பு கொள்கைகள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக சென்டாய் கூட்டமைப்பின் பின்வரும்



கோட்பாடுகளை பின்பற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

i. பேரிடர் அபாயத்தைப் புரிந்து கொள்வது
ii. பேரிடர் அபாய ஆளுமையினை மேம்படுத்துவது
iii. பேரிடர் அபாயக் குறைப்பிற்கு தேவையான முதலீடு செய்வது (கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத செயல்பாடுகள்)
iv. பேரிடர்களின் போது மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளுக்கான ஆயத்த நிலை, பேரிடருக்கான முன்னெச்சரிக்கை, பேரிடரின் போது சிறந்த மீட்புப் பணி மற்றும் பேரிடருக்கு பின்னர் சிறப்பான மறுசீரமைப்பு.

**2.29 பேரிடர் அபாய தகவல் தொடர்பு:**

பேரிடர் காலங்களில், பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு பேரிடர் அபாயம் குறித்தான தகவல்களை குறித்த நேரத்தில் தெரியப்படுத்தும் ஒரு அமைப்பு முறையினை உருவாக்குவது மிக முக்கியமானதாகும். இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம்,

மத்திய நீர்வள ஆணையம் போன்ற அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கை தகவல்கள் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றின் மூலம் பொதுமக்கள், மீட்பு மற்றும் நிவாரண முகமைகள் மற்றும் பேரிடர் மேலாண்மை சார்ந்த பிற பங்கேற்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், இன்சிடன்ட் கமாண்டர் அனைத்து விதமான தகவல் தொடர்பு முறைகளையும் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்கு தகவல்கள் சென்றடைய வழிவகை செய்வார்.

**2.30 மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம்:**

பேரிடர் தொடர்பான எச்சரிக்கை செய்திகளை கடைக்கோடி மக்களுக்கு



கொண்டு செல்வது பேரிடர் மேலாண்மையில் முக்கிய அங்கமாகும். இந்த வகையில், 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஒரு மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர்வள ஆணையம் மற்றும் இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் மற்றும் இதர அமைப்புகளிடமிருந்து மழை, புயல், வெள்ளம், வறட்சி மற்றும் நிலநடுக்கம் குறித்த முன்னெச்சரிக்கை தகவல்களை மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் பெறுகின்றது. பெறப்பட்ட தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கும், முக்கிய துறைகளுக்கும், பேரிடர் மேலாண்மையின் இதர பங்கேற்பாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் கொண்டு சேர்க்கிறது. பேரிடர் அபாயத்தில்

இருக்கும் பொதுமக்கள் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் இந்த மையத்தை தொடர்பு கொள்ள முடியும். பெரும் பேரிடர் காலங்களில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், முதன்மைச் செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோருடன் இணைந்து மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்தும் ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பார்கள். 2021 –ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு வரப்பெற்ற 7,539 புகார்கள் தீர்வு காணப்பட்டது.



உக்ரேன் நாட்டில் வசிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அவசர கட்டுப்பாட்டு மையம் செயல்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 26.02.2022 அன்று உக்ரேன் நாட்டில் வசிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுடன் மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தொடர்பு கொண்டு அவர்களது பாதுகாப்பு குறித்து கேட்டறிந்தார்கள். உக்ரேன் நாட்டில் வசிக்கும் தமிழர்கள் குறித்து மாநில அவசர கட்டுப்பாட்டு



மையத்திற்கு வரப்பெற்ற 574 தொலைபேசி அழைப்புகளின் பேரில் உரிய விவரம் தெரிவிக்கப்பட்டது.

**2.31 மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம்:**

மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையம், மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்றது. இம்மாவட்ட அவசர கட்டுப்பாட்டு மையங்கள், பேரிடர் காலங்களில் மாவட்ட அளவிலான தகவல் தொடர்பு மையமாக செயல்படுகிறது. மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் வானிலை முன்னறிவிப்புகள் / எச்சரிக்கைகளின் அடிப்படையில் பேரிடர் தொடர்பான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை செயல்படுத்திடவும் மற்றும் தகவல்களை வட்ட மற்றும் கிராம அளவில் பொதுமக்களுக்கு உடனுக்குடன் கொண்டு சேர்க்கின்றது. மாவட்ட அவசர கட்டுப்பாட்டு



மையம் பேரிடர் காலங்களில், முக்கிய துறை அலுவலர்களை தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் அமர்த்தி, அவர்தம் பணிகளை கண்காணித்து, வரப்பெற்ற அறிக்கைகளை தொகுத்து வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையருக்கு உடனுக்குடன் தெரிவிக்கிறது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் பொதுமக்கள் இம்மையங்களைத் தொடர்பு கொள்ள முடியும்.

**2.32 பேரிடரை எதிர்கொள்ளுதல்:**

பேரிடர்கள் ஏற்படும் போது முன்னறிவிப்பின் அடிப்படையில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளிலிருந்து, பொது மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கும், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை

தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது. பேரிடர் மீட்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினை தமிழக அரசு உருவாக்கியுள்ளது. மேலும், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்புகளின் திறன்களை மேம்படுத்துவதற்காக, ரோபோடிக் எஸ்கவேட்டர், நவீன களை எடுப்பான்கள், அதிக திறன் கொண்ட நீர் உறிஞ்சும் இயந்திரங்கள், இடம் பெயரத்தகு விளக்குகள் மற்றும் மிதவைப் படகுகள் உள்ளிட்ட உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**2.33 TN–SMART – உலகத் தரம் வாய்ந்த தொழில் நுட்பம்:**

வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் மற்றும் ஆப்பிரிக்க – ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகைப் பேரிடர் முன்னறிவிப்பு அமைப்புடன் (RIMES) இணைந்து உலக வங்கி நிதி



உதவியுடன் TN–SMART திட்டத்தினை வடிவமைத்துள்ளது.

TN–SMART செயலியை தமிழக அரசின் ஒரு சிறந்த முன்னெடுப்பு என தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த செயலியை 2,50,579–க்கும் மேற்பட்ட நபர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர். இந்த செயலியின் மூலம் பேரிடர் ஆபத்துகளை தெரிவித்து பொதுமக்கள் எளிதில் உதவி பெற இயலும். இந்த செயலியின் பயனாளர்கள் குறுஞ்செய்தி, புகைப்படம் மற்றும் காணொளி வாயிலாக புகார்களை பதிவு செய்யலாம். பாதிப்பிற்குள்ளாக்கூடிய பகுதிகளிலிருந்து பொதுமக்களை

முன்கூட்டியே அழைத்து சென்று பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கு மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கும், மீட்புக் குழுவினருக்கும் TNSMART–இன் வெள்ள அபாய எச்சரிக்கைகள் பெரும் உதவியாக அமைகிறது. 2021–2022–ஆம் ஆண்டில் TNSMART செயலி மூலம் மின்னல் தொடர்பான எச்சரிக்கை செய்திகளை அனுப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிலையினை கண்காணித்து தகவல் அளிக்கும் வசதியையும் TNSMART செயலியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஜூன் 2022 முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



**TNSMART**




**2.34 ஆளில்லா வானூர்தி மூலம் வான்வழி புகைப்படவியல் ஆய்வு (UAV):**

தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகும் கடலோர மற்றும் உள் மாவட்டங்களான கடலூர், மதுரை, விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர்,

விழுப்புரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், சேலம், திண்டுக்கல்,



மணல்படி



ஆக்கிரமிப்புகள்

நாமக்கல், ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீர்வழிகள் மற்றும் நீர்நிலையோரங்களின் சுமார் 5650.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பகுதிகள் ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி வான்வழிப் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. சென்னை தொழில் நுட்ப கழகத்தின் வான்வெளி ஆராய்ச்சி மையம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாக இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த புகைப்படங்களானது இலக்க முறை பரப்பு



அமைப்பு (Digital Surface Model), இலக்க முறை நிலப்பரப்பு / இலக்க முறை நிலமட்ட அமைப்பு (Digital Terrain Model / Digital Elevation Model) ஆக மாற்றம் செய்து புவிசார் தகவல் அமைப்பு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது.

### 2.35 அவசர நிலை மேலாண்மைக்கான மாநில தரவுத்தளம்:

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புவிசார் தகவல் மையம், தேசிய அவசர மேலாண்மை தரவுகளை மாநில அளவில் பயன்படுத்துவதற்கு தனிப்பயனாக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. அவசர மேலாண்மை தரவுகளை சேகரிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள செயலி மூலம் மாவட்ட அளவில் பல்வேறு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. புயல் சீற்ற மாதிரியும், மாவட்ட அளவில் சேகரிக்கப்பட்ட பேரிடர் தரவுகளும் மாநில அவசர மேலாண்மை

தரவு தளத்தில் ஒருங்கிணைக்கப்படுகிறது. தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலையுணர்வு மையம் மற்றும் சென்னை தொழில்நுட்பக் கழகத்துடன் ஒருங்கிணைந்து இப்பணியை செய்து வருகின்றது.

**2.36 மாநில மற்றும் மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்:**

மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம், இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் நிலவரங்கள் முன்கணிப்பு மையம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவற்றின் உள்ளீடுகளை பெற்று, மாநில அளவில் வறட்சி நிலையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.



தமிழ்நாட்டில் கடந்த 2021–ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில் முறையே 17% மற்றும் 59% கூடுதலாக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது. மாநில நீர்வளத் துறையின் நிலத்தடி நீர் மட்ட ஆய்வுகளின் படி, பிப்ரவரி 2021 இல் இருந்த நீர்மட்டத்துடன் ஒப்பிடும் போது, தற்பொழுது (பிப்ரவரி 2022) 26 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் 0.24 முதல் 4.59 மீட்டர் வரை அதிகரித்துள்ளது. இதர 12 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் 0.12 முதல் 0.47 மீட்டர் குறைந்துள்ளது. மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையமானது மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒரு அங்கமாக செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, அவரது கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

## 2.37 பேரிடர் மேலாண்மைக்கான பொதுவான எச்சரிக்கை நெறிமுறை:

பேரிடர் காலங்களில், முன்னெச்சரிக்கை தகவல்களை அதிகப்படியான நபர்களுக்கும், மீட்புப் பணியில் ஈடுபடும் பல்வேறு துறையினருக்கும் மிக விரைவாக அனுப்புவது அவசியமாகிறது. பேரிடர் தொடர்பான எச்சரிக்கை தகவல்களை அளிக்கும் இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய நீர்வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், பாதுகாப்பு புவியியல் தகவல் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வன ஆய்வு நிறுவனம் மற்றும் எச்சரிக்கை தகவல்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அமைப்புகளான பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பு (Common Alert Protocol)



உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பினை பயன்படுத்தி 2021 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழைக் காலத்தில், பேரிடர் தொடர்பான 16 எச்சரிக்கை தகவல்கள் 28,91,931 நபர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்பட்டுள்ளன.

## 2.38 சமுதாய பங்களிப்பு:

### முதல் நிலை மீட்பாளர்கள்

பேரிடர் மேலாண்மையில், சமுதாயப் பங்களிப்புடன் கூடிய அணுகுமுறை என்ற அடிப்படையில், உள்ளூர் சமுதாயத்தை செயலூக்கமுள்ள பங்குதாரர்களாகக் கருதி, பேரிடர் மேலாண்மையில் அவர்களை ஈடுபடுத்தும் போது பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகளில் சிறந்த முன்னேற்றம் காணலாம். சமூக அளவில் பேரிடர்களின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் குடியிருப்பு பகுதிகளில் தன்னார்வலர்களின்

திறன்களை மேம்படுத்துவது அரசின் முக்கிய நோக்கமாகும். இந்த அணுகுமுறை, உள்ளூர் சமுதாயத்திற்கு தங்களது பேரிடர் தயார் நிலையை சுய அனுபவத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மேலும், குடியிருப்புகள் அளவில் திட்டங்கள் தயார் செய்யவும், முடிவுகளை எடுக்கவும் மற்றும் பேரிடர் குறைப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கவும் சமுதாய பங்களிப்பு முறை உதவியாக அமையும்.

இதன் அடிப்படையில், சமுதாய பேரிடர் மீட்புப்படையினை உருவாக்கும் வகையில், 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பு பகுதிகளிலும் குறைந்தபட்சம் இரண்டு முதல்நிலை மீட்பாளர்களை கண்டறிந்து முதல்நிலை மீட்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ரூ.20.42 கோடி செலவில்



செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 65,000 குடியிருப்பு வாசிகள் முதல்நிலை மீட்பாளர்களாக பயிற்சி பெறுவார்கள்.

### 2.39 ஆப்த மித்ரா – சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சி திட்டம்:

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் 16 மாவட்டங்களில் விரிவுப்படுத்தப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன், 5500 தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்பு பயிற்சி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி மையம், செங்கல்பட்டு, தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை, சென்னை, தமிழ்நாடு தீயணைப்பு மாநில பயிற்சி மையம், தாம்பரம், தமிழ்நாடு நகர்புற பயிற்சி மையம், கோயம்புத்தூர், தேசிய பேரிடர் மீட்புப் படை, அரக்கோணம், அண்ணா நிருவாக பணியாளர்

கல்லூரி, சென்னை ஆகிய நிறுவனங்கள் மூலம் தன்னார்வலர்களுக்கு 12 நாட்கள் தொடர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

**2.40 பேரிடர் ஆயத்த நிலை:**

பேரிடர் மேலாண்மையில் தயார் நிலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படும் சூறாவளி, புயல், கன மழை, மேக வெடிப்பு மற்றும் இதனைத் தொடர்ந்து ஏற்படும் வெள்ளம் ஆகியவற்றை எதிர்கொள்ள 2021 செப்டம்பர் மாதத்திலிருந்து பல்வேறு விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

2021 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது:–

i. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.9.2021, 26.10.2021 மற்றும் 06.11.2021 ஆகிய நாட்களில் பல்வேறு துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தினார். இக்கூட்டங்களில், வடகிழக்கு பருவமழையினை திறம்பட எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்து, பேரிடர்களின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய

நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கினார்கள்.



ii. மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் ஆட்சி மன்றக்குழு





கூட்டத்தினை நடத்தி பேரிடர் ஆயத்த நிலையினை ஆய்வு மேற்கொண்டார்கள்.

iii. தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் அனைத்து துறை செயலர்கள், துறைத் தலைவர்கள் ஒன்றிய அரசின் நிறுவனங்களின் அலுவலர்கள், முப்படையினைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் 04.09.2021 மற்றும் 11.09.2021 ஆகிய நாட்களில் ஆய்வுக் கூட்டம் நடத்தி அறிவுரை வழங்கினார்,

iv. மாநிலம் முழுவதும் வெள்ள அபாயத்தை தணிக்கும் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வருவாய் நிருவாக ஆணையரால் துறைத் தலைவர்களுடனும், சீருடை படைகளின் உயர் அலுவலர்களுடனும் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

v. பல்வேறு பேரிடர்களை கையாள்வதற்கான நிலையான வழிகாட்டு நடைமுறைகளின் தொகுப்பு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டு மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து தொடர் ஆய்வு / ஆலோசனை கூட்டங்களும் நடத்தப்பட்டன.

vi. வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்த நடவடிக்கைகளை உறுதி செய்திடும் வகையில், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் அனைத்து துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

vii. பேரிடர் மேலாண்மையில் தன்னார்வலர்களின் ஈடுபாட்டை உறுதி



செய்திடும் வகையில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் தன்னார்வலர் ஒருங்கிணைப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு 05.10.2021 அன்று தன்னார்வலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

viii. பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளைக் கருத்தில் கொண்டு, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தேசிய பேரிடர் மீட்புப்படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படையின் குழுக்கள் முன்கூட்டியே நிலை நிறுத்தப்பட்டன.

**2.41 வடகிழக்கு பருவமழை:**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை மழைப்பொழிவு ஏற்படுகிறது. இந்த வடகிழக்கு பருவமழை காலத்தில் வருடாந்திர சராசரி மழையளவில் 47.78% தமிழ்நாட்டிற்கு கிடைக்க பெறுகிறது. வடகிழக்கு பருவமழை காலத்தில், ஏற்படும் சூறாவளி, புயல் மற்றும் கனமழையின் காரணமாக தனி நபர் உடைமைகளுக்கும், பொது உள்கட்டமைப்பிற்கும் பெருத்த சேதம் ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை 25.10.2021 அன்று தொடங்கியதிலிருந்து, வங்க கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மற்றும் மேலடுக்கு சுழற்சியின் காரணமாக மாநிலம் முழுவதும் பரவலாக மழைப்பொழிவு ஏற்பட்டது. வடகிழக்கு



பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் 711.6 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 59 சதவிகிதம் கூடுதல் ஆகும்.

அக்டோபர் 2021–இல் வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மற்றும் நவம்பர் மாத தொடக்கத்தில் வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதிகன மழை ஏற்பட்டது. சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் பெய்த கனமழையின் காரணமாக மனித உயிரிழப்புகள், உடைமைகள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து வங்கக் கடலில் உருவான மற்றுமொரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், 19.11.2021 அன்று தமிழகக்

கரையைக் கடந்த காரணத்தால், விழுப்புரம், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் அதிக அளவில் மழைப்பொழிவு ஏற்பட்டது.

மேலும், அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பெய்த கனமழையின் கரணமாக பாலாறு, தென்பெண்ணையாறு, கொள்ளிடம், கொசஸ்தலையாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, பல கிராமங்கள் வெள்ள நீரால் சூழப்பட்டு, பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளது.

2021–ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் மாதங்களில் வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் காரணமாக ஏற்பட்ட சேதங்ளுக்கு நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் போர்க்கால



அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தமிழ்நாட்டில் 26.11.2021 முதல் 01.12.2021 வரை பல பகுதிகளில் இடைவிடாது மழைப் பொழிவு ஏற்பட்டது.

அக்டோபர், 2021 முதல் பெய்த கனமழையின் காரணமாக பெரும்பாலான நீர்த்தேக்கங்கள், ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியிருந்த நிலையில், 26.11.2021 முதல் 01.12.2021 வரை பல மாவட்டங்களில் பெய்த அதி கன மழையின் காரணமாக நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டதாலும், ஏரிகள் நிரம்பி



வழிந்ததாலும், மாவட்டங்களின் பல பகுதிகளில் வெள்ள நீர் சூழும் நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருநெல்வேலி, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, விருதுநகர், திருவண்ணாமலை, கன்னியாகுமரி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தென்காசி, திருச்சிராப்பள்ளி மற்றும் தேனி மாவட்டங்களில், வேளாண் / தோட்டக்கலை பயிர்கள் மற்றும் முக்கிய உட்கட்டமைப்புகளான சாலைகள், மின்சாரம், வீடுகள் ஆகியவற்றிற்கு பெருத்த சேதம்





ஏற்பட்டது.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கனமழையால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க உத்தரவிட்டதோடு, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம். திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மழை/வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டு, பாதிப்பிற்குள்ளான மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உயர் அலுவலர்களும் முகாமிட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.11.2021 மற்றும் 10.11.2021 ஆகிய தேதிகளில்

மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகைப்புரிந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்.

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் குடிசை சேதம் ஆகியவற்றிற்கு 96,273 குடும்பங்களுக்கு ரூ.32.66 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பாதிப்பிற்குள்ளான 1.80 லட்சம் ஹெக்டேர் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு உயர்த்தப்பட்ட நிவாரணமாக 3.59 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.168.37 கோடி வழங்கப்பட்டுள்ளது.





பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் பல்வேறு துறைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

| **வ. எண்.** | **துறை** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| 1. | பெருநகர சென்னை மாநகராட்சி | 132.00 |
| 2. | நகராட்சி நிருவாகம் | 65.00 |
| 3. | பேரூராட்சிகள் | 8.00 |
| 4. | சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | 15.00 |
| 5. | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனம் | 15.00 |
| 6. | நெடுஞ்சாலைத் துறை | 17.00 |
| 7. | தமிழ்நாடு குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | 4.00 |
| 8. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை | 10.00 |
| 9. | கால்நடை பராமரிப்பு துறை | 4.00 |
| 10. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | 0.55 |
| 11. | பொதுப்பணித் துறை (கட்டடங்கள்) | 3.00 |

| | | |
|---|---|---|
| 12. | பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரகம் | 6.00 |
| 13. | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் | 0.45 |
| 14. | நீர் வள ஆதாரத் துறை | 20.00 |
| | **மொத்தம்** | **300.00** |

கனமழை மற்றும் அதனைத் தொடர்ந்த வெள்ளம் காரணமாக ஏற்பட்ட பெருமளவிலான சேதங்களைக் கருத்தில் கொண்டு, ரூ.6230.45 கோடி நிதியுதவி கோரி மாநில அரசால் ஒன்றிய அரசுக்கு மூன்று கோரிக்கைகள் பின்வருமாறு அனுப்பப்பட்டுள்ளது:–

| **வ. எண்.** | **விவரம்** | **கோரப்பட்ட தொகை** | | |
|---|---|---|---|---|
| | | தற்காலிக சீரமைப்பு | நிரந்தர சீரமைப்பு | மொத்தம் |
| | | **(ரூ. கோடியில்)** | | |
| **1.** | முதல் முன்மொழிவு | **549.63** | **2079.66** | **2629.29** |
| **2.** | கூடுதல் முன்மொழிவு | **521.29** | **1475.21** | **1996.50** |
| **3.** | துணை முன்மொழிவு | **439.91** | **1164.75** | **1604.66** |
| **மொத்தம்** | | **1510.83** | **4719.62** | **6230.45** |



இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் பல்துறை அலுவலர்களைக் கொண்ட ஆய்வுக்குழு, தமிழ்நாட்டில் 21.11.2021 முதல் 24.11.2021 வரை சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, கன்னியாகுமரி, வேலூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் அக்டோபர்–நவம்பர், 2021–இல் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மற்றும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

2021–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் வழங்கவும் மறுசீரமைப்பிற்காகவும் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.352.85

கோடியை தமிழ்நாடு அரசுக்கு விடுவித்துள்ளது, இது ஒன்றிய அரசிடம் கோரப்பட்ட மொத்தத் தொகையான ரூ.6230.45 கோடியில் 5.66% மட்டுமே ஆகும்.

**2.42 கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டம் (CDRRP):**

தமிழ்நாட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாயக் குறைப்பு திட்டம் ரூ.1560.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கியப்பணிகளான பல்வேறு பேரிடர்களை தாங்கக்கூடிய வீடுகள் மற்றும் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல், மீன் இறங்கு தளங்கள் அமைத்தல், மீனவர்களுக்கு VHF வானொலி வழங்குதல் உள்ளிட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பூமிக்கு மேல் உள்ள மின் இணைப்புகளை, பூமிக்கு கீழ் உள்ள இணைப்புகளாக மாற்றுதல், பேரிடர் காலங்களில்



பொது மக்களுக்கு எச்சரிக்கை செய்திகளை அனுப்புவதற்காக முன்னெச்சரிக்கை கருவிகள் நிறுவும் பணி மற்றும் கடற்கரை பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

**2.43 கோவிட் – 19:**

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் (பேரிடர் மேலாண்மை பிரிவு) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக கொரோனா வைரஸ் தொற்று நோயை (கோவிட் – 19) பேரிடராக அறிவித்தது. மேலும், கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்படுத்த ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, மாநிலம் முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்தது. கடந்த 2021–ஆம் ஆண்டில் கோவிட் –19 இன் இரண்டாவது அலையின் போது மாநிலம் முழுவதும்

கொரோனா நோய்த் தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது. எனவே கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. தமிழக அரசால் எடுக்கப்பட்ட தீவிர நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக நோய்த் தொற்றினால் பாதிப்பிற்குள்ளாகும் நபர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு பல செயல்பாடுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது சமுதாய, கலாச்சார மற்றும் அரசியல் கூட்டங்கள் போன்ற பொதுமக்கள் கூடும் நிகழ்வுகள் உட்பட அனைத்து செயல்பாடுகளுக்கும் 03.03.2022 முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் கொரோனா நோய்தொற்று குறைந்துள்ள



போதிலும் நிலைமை தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொரோனா தொற்று நோயை கட்டுப்படுத்த தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்த அறிவுரைகள் வழங்கப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்று நோய் (கோவிட்–19) கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, தமிழக அரசு ரூ.9171.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக உயிரிழந்த 55,743 நபர்களது குடும்பங்களுக்கு ரூ.278.715 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**2.44 மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதி:**

ஒன்றிய அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியை மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியாக பின்வரும் கூறுகளுடன் மறுசீரமைத்துள்ளது:–

i) மீட்பு மற்றும் நிவாரணம்
ii) மறுசீரமைப்பு
iii) தயார் நிலை மற்றும் திறன் மேம்பாடு
iv) தணிப்பு நடவடிக்கைகள்


மாநிலத்தில் பேரிடர் தணிப்பு திட்டங்களை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு, அரசாணை (நிலை) எண். 91, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 28.2.2022–இன்படி, மாநில பேரிடர் தணிப்பு நிதியினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மாநில பேரிடர் தணிப்பு நிதிக்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 92,



வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 28.2.2022–இன்படி வெளியிடப்பட்டுள்ளது.

மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியின் கீழ் ஆண்டு வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை விவரம் பின்வருமாறு:–

| வருடம் | ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|
| 2021 – 22 | 1360.00 |
| 2022 – 23 | 1428.00 |
| 2023 – 24 | 1500.00 |
| 2024 – 25 | 1575.00 |
| 2025 – 26 | 1653.00 |
| **மொத்தம்** | **7516.00** |




**2.45 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்:**

நீடித்த வளர்ச்சிக்கான இலக்கானது அனைவருக்குமான நலவாழ்வு மற்றும் நீடித்த எதிர்காலத்தை அமைக்க வழிக்காட்டியாக அமைந்துள்ளது. 2030 ஆவணமானது நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகளையும் 169 குறிக்கோள்களையும் உள்ளடக்கியதாக



உள்ளது. அவற்றை செயல்படுத்துவதில் வறுமை ஒழிப்பு முதன்மையான முயற்சியாகும். பல்வேறு ஓய்வூதிய நல திட்டங்களின் மூலம் கடுமையான வறுமை மற்றும் பசியை போக்குவதே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மையின் இலக்காகும். பல்வேறு பேரிடர் தணிப்பு பணிகள் மூலம் நீடித்த வளர்ச்சிக்கான அணுகுமுறை அடைய ஏதுவாக அமைகிறது.

# 3. நில நிருவாகம்

3.1 நிலம் தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 1980–ஆம் ஆண்டு முன்னாள் வருவாய் வாரியத்திலிருந்து நில நிருவாகணையரகம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையரகத்தால் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு

- நிலவுடைமை ஆவணங்கள் பராமரித்தலைக் கண்காணித்தல் (தனியார் நிலங்களின் பட்டா மாற்றம் / அவற்றின் மீதான மேல்முறையீடு மற்றும் சீராய்வு முறையீடு)
- இரயத்துவாரி நிலவரிச் சட்டங்கள், நத்தம் நிலவரித் திட்டம், நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழான சட்டபூர்வ மற்றும் மேல் முறையீட்டு அதிகாரங்கள்



**அரசு நிலங்கள் தொடர்பானவை:–**

- அரசு நிலங்களை மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறையின் பயன்பாட்டிற்கும் ஒன்றிய அரசின் துறைகளின் பயன்பாட்டிற்கும் நிலமாற்றம் செய்து வழங்குதல்
  - ஒன்றிய / மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்தல்,
  - ஆட்சேபனையுள்ள மற்றும் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுதல்.
  - அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,
  - விவசாய நில ஒப்படை / வீட்டுமனை ஒப்படை ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துதல்
  - பொது நோக்கங்களுக்காக தனியார் நிலங்களை கையகப்படுத்தல்

- அரசின் நீர் ஆதாரங்களிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுப்பதை முறைப்படுத்துதல்.
- சிறு பாசன கணக்கெடுப்பு.

**3.2 வீட்டுமனை ஒப்படை:**

வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதி பெறுவதற்காக இலவச வீட்டுமனைப் பட்டா அல்லது வீடு வழங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு, வருவாய் நிலை ஆணை எண். 21–இன் கீழ் கிராம நத்தத்தில் காலியாகவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் தகுதியுடைய, வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. நத்தம் வகைபாடு கொண்ட நிலங்கள் போதுமானதாக இல்லாத நேர்வுகளில், பிற ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களை தேர்வு செய்து வருவாய் நிலை ஆணை எண் 21(6)–இன் கீழ்



வருவாய் கோட்டாட்சியர் / மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து தகுதி வாய்ந்த, வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

பெண்கள் நலனை உறுதி செய்யும் வகையில் இலவச வீட்டுமனை ஒப்படை குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஊரக பகுதியில் மூன்று சென்ட் நிலமும், நகர்ப்புற பகுதியில் ஒன்றரை சென்ட் நிலமும், மாநகராட்சி பகுதிகளில் ஒரு சென்ட் நிலமும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படியும், இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டும் வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. இதன்படி 07.05.2021 முதல் 31.03.2022 வரை 1,51,701 இலவச

வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைத் திட்டம் / நகர நில அளவைத் திட்டத்தின் கீழ் ஒப்படை வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் விளிம்பு நிலையில் உள்ள இருளர்கள், நரிக்குறவர்கள் ஆகியவர்களுக்கு உரிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிய பார்வையில் நடவடிக்கைகள் மேற்–கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்கள் தொடர்பாக தரவு தளம் (Data Base) உருவாக்கிடவும் மற்றும் சிறப்பு வரன்முறைத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் பணி முன்னேற்றத்தை கண்காணித்திடவும் அரசு நிலப்பதிவேடு மென்பொருளானது, தேசிய



தகவலியல் மையத்தினால் மேம்படுத்தப்பட்டு அதன் மூலம் அரசு புறம்போக்கு நிலங்களிலுள்ள நிலவியல் ஆக்ரமண விவரங்களை அறிந்துகொள்ள ஏதுவாக தமிழ்நிலம் மற்றும் இ–அடங்கலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### 3.3 பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவையானது, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கண்காணித்து வருகிறது. மேலும், நிலநிருவாக ஆணையராகல் இணையதள வழியிலான பட்டா மாறுதல் குறித்த முன்னேற்றமானது அவ்வப்போது நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் / மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய்

அலுவலர்களுடன் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**இணையதள வழியிலான பட்டா மாறுதல்:**

பட்டா மாறுதல் தொடர்பான இணையதள சேவைகள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில், இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பிக்கும் போது அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, இந்தப் பட்டா மாறுதல் கோரும் மனு மீது வட்ட அளவிலான அலுவலர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்கு அனுப்பப்படுகின்றது. இந்த வசதியைப்



பயன்படுத்தி, விண்ணப்பதாரர் சிட்டா நகலையும், "அ" பதிவேடு நகலையும் இணைய வழியில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்புக் குறியீடு (Quick Response – QR code) இணைக்கப்பட்டு இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது மாநிலத்தில் அனைத்து வட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தின் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களில் உள்ள நிலுவை இனங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் மற்றும் நில நிருவாக ஆணையரகம் மூலமாக உரிய காலங்களில் கண்காணிக்கப்பட்டு, மாவட்ட அளவில் இணையவழி பட்டா மாறுதல்களை மேலும் துரிதப்படுத்த உரிய அறிவுரைகளை அரசு அவ்வப்போது வழங்கி வருகிறது.

நிலம் தொடர்பாக பதிவுத்துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பதிவுகளும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு, இணையதளம் வழியாக வருவாய்ப் பதிவுகளில் (Tamilnilam land records database) மாறுதல் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி தனியாக மனு செய்வது தவிர்க்கப்படுகிறது.

### 3.4 நிலக் குத்தகை

வருவாய் நிலை ஆணை எண்.24A–இன்கீழ், அரசு புறம்போக்கு நிலங்கள் / கட்டடங்கள் / நிலத்துடன் கூடிய கட்டடங்கள் போன்றவை, வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், தனியார் மற்றும் தனியார் அமைப்புகளுக்கு தற்காலிகமாக குத்தகை



அடிப்படையில் பல்வேறு நிபந்தனை–களுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. குத்தகைக்கு வழங்கப்படும் அரசு புறம்போக்கு நிலங்கள் முறையாக பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன.

(அ) அரசு நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதோ அல்லது குத்தகை உரிமையை மாற்றம் செய்யவோ கூடாது.

(இ) குத்தகை நிபந்தனை மீறப்படின், குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலம், எவ்வித இழப்பீடுமின்றி உரிய வழிமுறைகளின்படி அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், அத்தியாவசியம், சமூகசேவை மற்றும் பொது நல நோக்கங்களின் அடிப்படையில் செயல்படும் அமைப்புகளுக்கு தேவை எனக் கருதும் பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை வழங்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் விதிமுறைகளின்படி வணிகமற்ற நோக்கத்தில் செயல்படும் குத்தகை இனங்களில் ஆண்டு குத்தகை கட்டணம் நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்தில் செயல்படும் இனங்களில் 14 விழுக்காடும் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாதிரி நிலத்தின் விற்பனை மதிப்பு அல்லது வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு ஆகியவற்றில்



எது அதிகமோ அதன் அடிப்படையில் அரசு நிலத்தின் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் பேரில் நிலக்குத்தகை கட்டணம் கணக்கிடப்படுகிறது. சிறப்பு நேர்வுகளில் சமூக சேவை மற்றும் பொதுநல நோக்கில் செயல்படும் அமைப்புகளுக்கு சலுகை அடிப்படையில் பெயரளவு குத்தகை தொகை அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், நில மதிப்பினை கணக்கில் கொள்ளாமல், அப்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் ஆண்டு குத்தகைத் தொகையானது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரால் மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போதைய குத்தகை வழங்கும் இனங்கள் மற்றும் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை புதுப்பிக்கும் இனங்கள்

ஆகியவற்றில் குத்தகைக்கு உட்படும் அரசு நிலங்களின் உத்தேச நில மதிப்பின் அடிப்படையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:–

**அட்டவணை 3–1**

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு (நில மதிப்பில்) | |
|---|---|---|
| | நில குத்தகை (புதிய இனங்களுக்கு) (ரூபாய்) | குத்தகை புதுப்பித்தல் (ரூபாய்) |
| வட்டாட்சியர் | இல்லை | இல்லை |
| வருவாய் கோட்டாட்சியர் | ரூ.50,000/– வரை | இல்லை |
| மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/– வரை | இல்லை |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/– வரை | ரூ.10,00,000/– வரை |
| நில நிருவாக ஆணையர் | ரூ.5,00,000/– வரை | ரூ.25,00,000/– வரை |
| அரசு | ரூ.5,00,000/–க்கு மேல் | ரூ.25,00,000/–க்கு மேல் |

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த குத்தகை



பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) முடிவுற்ற பின்பு, இப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated). குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை வட்டாட்சியர் / வருவாய்க் கோட்டாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ஆகியோரால் அவ்வப்போது புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

மேலும், உப்பளம், பேருந்து நிலையம், மண்ணெண்ணெய் நிலையம், ஆராய்ச்சி நிலையம் மற்றும் கல்லூரி நிறுவனங்களுக்கு

குத்தகைக்கு வழங்கப்பட்ட புதுப்பிக்கப்படாத குத்தகை இனங்கள் மீது புதுப்பித்திட தற்போது நடவடிக்ககைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.4.1.உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்:

வருவாய் நிலை ஆணை எண். 24A– இன்படி, கடலோர மாவட்டங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் (Salt Pan) உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உப்பு உற்பத்திக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் அரசு நிலங்களுக்கு குத்தகை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3–2**

| | | |
|---|---|---|
| 1. | குத்தகைத் தொகை | ரூ.5/–வீதம் ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 2. | உரிமத் தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/– வீதம் குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு ரூ.100/– |
| 3. | தலவரி 100% | ரூ.5/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |



| | | |
|---|---|---|
| 4. | தலமேல்வரி 500% | ரூ.25/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| | மொத்தம் | ரூ.135/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |

தமிழக கடலோரப் பகுதிகளில் சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனிநபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. சிறு உப்பு உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும், உப்பு தயாரித்தல் பணியை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழகத்தில் உள்ள உப்பள நிலங்களுக்கு இதர மாநிலங்களை ஒப்பிட்டு நோக்குகையில், குறைந்தபட்ச குத்தகைத் தொகை மற்றும் உரிமத் தொகையே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## 3.5 ஆக்கிரணமங்களை அகற்றுதல்

அரசுக்கு சொந்தமான நிலங்களை ஆக்கிரமணங்கள் இன்றி, பாதுகாக்கும் பணியினை, அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அரசு நிலங்களை பாதுகாப்பது அரசின் கட்டாய கடமை என்பதனால் நில உரிமை துறைகள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலங்களில் ஏற்படும் ஆக்கிரமணங்களை தங்களது துறை சார்ந்த சட்டங்களின், சட்டப்பிரிவின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். *(உதாரணம்):-* தமிழ் நாடு குளங்கள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமணங்கள் அகற்றுதல் சட்டம் 2007, தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம் 1958, இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 1959 மற்றும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய சட்டம் 1995 முதலியன.



தமிழ்நாடு நில ஆக்கிரமணங்கள் சட்டம் 1905 வருவாய்த் துறைக்கு என்று பிரத்தியேகமாக உள்ளது என்றாலும், இச்சட்டத்தின் மூலம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதோடு மட்டுமல்லாமல் பிரத்தியேக சட்டங்கள் இல்லாத அரசின் துறைகளுக்கு தமிழ்நாடு நில ஆக்கிரமணங்கள் சட்டம் 1905னை பயன்படுத்தி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆக்கிரமணங்களை அகற்றுதல் தொடர்பான முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், செம்மஞ்சேரி கிராமத்தில் திருவாளர் ஜேப்பியார் கல்வியியல் அறக்கட்டளை, 91.04 ஏக்கர் சர்க்கார்–மானாவாரி தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு புலங்களில் பலவகை

ஆக்கிரமண நடவடிக்கை மேற்கொண்டதை, அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக பெருமதிப்பு மிக்க அரசு நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், சிட்லப்பாக்கம் ஏரியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமணங்களை நீர்வள ஆதாரத்துறை மூலம் ஆக்கிரமணங்களை அகற்றும் பணி நடவடிக்கையில் உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நீர்நிலைகள் சம்பந்தப்பட்ட ஆக்கிரமணங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் செயற்பொறியாளர் (நீர்வள ஆதாரத்துறை) ஆகியோர் இணைந்து தல ஆய்வு செய்தது கண்டறியப்பட்டு, ஆக்கிரமணங்கள் அகற்றும் பணி தொடர் நடவடிக்கையில் உள்ளது.



நீதிமன்ற தீர்ப்பு ரீ.ம எண் 26722/2013 மற்றும் பலவகை மனு எண் 1/2013 வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசு நிலங்களில் ஆக்கிரமணங்கள் அகற்றுதல் தொடர்பான மனுக்களை விரைந்து தீர்வு காண வழிவகை செய்திட அரசாணை (பலவகை) எண் 540, வருவாய் நி.மு6(2) துறை, நாள் 4.12.2014–இன் படி வட்ட, கோட்ட (மேல்முறையீடு) மற்றும் மாவட்ட (சீராய்வு) குழுக்கள் உருவாக்கப்பட்டது. தற்போது, அரசாணை (நிலை) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நி.மு 6(2), நாள்: 8.2.2022–இல் இக்குழுக்களை மாற்றி அமைத்து, புதியதாக, கோட்ட கண்காணிப்பு குழு (வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலும்), மாவட்ட கண்காணிப்பு குழு (மாவட்ட ஆட்சியர் தலைமையிலும்), மாநில வழிகாட்டும் குழு

(அரசின் தலைமைச் செயலர் தலைமையிலும்), அமைத்து ஒரு முனை திட்டத்தின் அடிப்படையில், அரசின் நீர்நிலை மற்றும் இதர புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை கண்டறிந்து, நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டது.

இதுவரை, 3852.16.09 ஹெக்டர் (2740.371 ஹெக்டர் நீர்நிலை புறம்போக்குகள் உட்பட) அரசு புறம்போக்குகளில் இருந்த ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுள்ளன.

### 3.6 நில மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண். 23 மற்றும் 23A–இன்கீழ், நிலமாற்றம் செய்யப்படுகின்றன. வருவாய் நிலை ஆணை எண். 23–இன் கீழ் ஒன்றிய அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையத்தை வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை எண்.



23A –இன் கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையமின்றியும் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

அரசுத் துறைகளுக்கு ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்யும் நேர்வுகளில் நில மதிப்பு வரம்பின்றி முன் நுழைவு அனுமதி வழங்கவும், ஆட்சேபனையுள்ள புறம்போக்கு நிலங்களுக்கு சம்பந்தப்பட்ட துறையின் தடையின்மைச் சான்று பெற்று முன் நுழைவு அனுமதி வழங்கவும் மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் விவசாயம் மற்றும் உணவு பொருளதாரத்தின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகத்தின் கிடங்கு மற்றும் நேரடி கொள்முதல் மையம் அமைக்க கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

துறைக்கு அரசு நிலங்களை இலவசமாக நில மாற்றம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

### 3.7 நில உரிமை மாற்றம்:

அரசு நிலங்களை வருவாய் நிலை ஆணை எண்.24–இன்கீழ் ஒன்றிய & மாநில அரசு நிறுவனங்கள் / கழகங்கள் / வாரியங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு பொதுப் பயன்பாட்டிற்காகவும், அவற்றின் திட்டங்களுக்காகவும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சில நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. நில உரிமை மாற்றத்தின்போது வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை நில மதிப்பு



வசூல் செய்தும், வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வருவாய் நிலை ஆணை எண் 24(6)–இன் படி உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

பொது நலன் கருதி, குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்காக அரசு நிலங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அவ்வாறே, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தும்

திட்டத்திற்காக அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஏதேனும் நிபந்தனை மீறல் கண்டறியப்படும் எனில் அரசு நிலங்களை மீளப்பெற அரசுக்கு அதிகாரம் உண்டு.

ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை, பொறுத்தவரை நில உரிமை மாற்ற ஆணையினை நிலுவையில் வைத்து, நிலமதிப்பு உச்சவரம்பின்றி முன் அனுமதி வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் தற்போதைய நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



அட்டவணை 3-3

| வ.எண் | பதவி | அதிகார வரம்பு (ரூபாய்) |
| --- | --- | --- |
| 1 | வட்டாட்சியர் | 50,000/- |
| 2 | வருவாய் கோட்ட அலுவலர் | 1,00,000/- |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | 2,50,000/- |
| 4 | மாவட்ட ஆட்சியர் | 10,00,000/- |
| 5 | நில நிர்வாக ஆணையர் | 15,00,000/- |
| 6 | அரசு | 15,00,000/- க்கு மேல் |

**3.7.1 தலைமைச் செயலக அளவிலான குழு:**

நிலமாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் நிலக் குத்தகை தொடர்பான முன்மொழிவுகளின் மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டது. இக்குழு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளரை தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர் / உறுப்பினர் செயலாளராகவும் சம்பந்தப்பட்ட துறைத்

தலைவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி, தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் இசைவு / தடையின்மை கோரப்படும் நேர்வுகளில் தொடர்புடைய முன்மொழிவு இக்குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு துறைத் தலைவர்களின் கருத்திசைவு அல்லது ஆட்சேபனை பெறப்படுகிறது.

அரசாணை (நிலை) 621, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள் 01.10.2021–இன்படி , தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசு நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பட்டா வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும்,



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கவும், பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படை விதிகளின்படி நிபந்தனை பட்டா வழங்கவும் மாவட்ட ஆட்யர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.72, குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்(சி) துறை, நாள். 31.11.2021–இன்படி அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன(டான்சிட்கோ) தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும், இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

(சிட்கோ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பாக நிலப்பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காகவும், தொழில் முனைவோருக்கு பட்டா வழங்கிட ஏதுவாக அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், அதிகாரம் பெற்றக் குழுவினை அமைத்து ஆணை வெளியிட்டுள்ளது.

### 3.8 நிலஎடுப்பு

2013–ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் (ஒன்றிய சட்டம் 30/2013) ஒன்றிய அரசால் 01.01.2014 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்தைய 1894ஆம் ஆண்டின் பழைய நிலஎடுப்புச் சட்டம் நீக்கரவு செய்யப்பட்டது.



மேற்கண்ட புதிய நிலஎடுப்புச் சட்டத்தின் பிரிவு 105A–இன் கீழ் ஐந்தாவது அட்டவணையில் ஏற்கனவே தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள பின்வரும் மூன்று நிலஎடுப்புச் சட்டங்கள் சேர்க்கப்பட்டன:

1. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978)
2. தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)
3. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

மேற்படி மூன்று தமிழ்நாடு நிலஎடுப்பு சட்டங்களின் கீழ் நிலஎடுப்புப் பணிகளை தொடர்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்க தாக்குதல்) சட்டம், 2019 (தமிழ்நாடு சட்டம், 38/2019) இயற்றப்பட்டுள்ளது.

இதன்படி மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தமிழ்நாடு நிலஎடுப்புச் சட்டங்களின் அனைத்து சட்டப் பிரிவுகளும் (இழப்பீடு நிர்ணயம் செய்தல் தொடர்பான சட்டப் பிரிவுகள் தவிர) 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் தேதியன்று மற்றும் அன்றைய தேதியிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2013–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சரியீட்டைத் தீர்மானித்தல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வைத் தீர்மானித்தல், மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் முதலானவை மேற்படி மூன்று சட்டங்களுக்கும் பொருந்தும்.

பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான



நிலங்களை கையகப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு, மாநிலம் முழுவதும் ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களுக்காக சுமார் 20,000 ஹெக்டேர் பட்டா நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றுள் சில முக்கியமான திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 3–4**

| மாநில அரசின் துறைகள் / நிறுவனங்களுக்காக நிலஎடுப்பு செய்யப்படும் சில முக்கிய திட்டங்கள் | |
|---|---|
| நீர்வளத்துறை | 1) தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிநீர் இணைப்புத்திட்டம்.<br>2) காவேரி – வைகை – குண்டாறு நதிநீர் இணைப்புத்திட்டம்.<br>3) தர்மபுரி – கிருஷ்ணகிரி எண்ணேகொள் கால்வாய்திட்டம்.<br>4) கடலூர் அருவாள்மூக்கு கால்வாய்திட்டம். |

| | |
|---|---|
| | 5) தஞ்சாவூர் – மயிலாடுதுறை – கடலூர் ஆதனூர் குமாரமங்கலம் திட்டம்.<br>6) சேலம் மேட்டூர் சரபங்காதிட்டம். |
| மாநில நெடுஞ்சாலைத் துறை | சென்னை சுற்றுவட்டச் சாலை, சென்னை வெளிவட்டச்சாலை, சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டச்சாலைகள், பல்வேறு நகரங்களுக்கான புறவழிச்சாலைகள், சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள், பல்வேறு சாலை விரிவாக்க பணிகள் உள்ளிட்டவை. |
| சிப்காட் | 1) இராணிப்பேட்டை பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்கா.<br>2) திருவண்ணாமலை செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா.<br>3) தர்மபுரி சிப்காட் தொழிற்பூங்கா.<br>4) ஓசூர் சிப்காட் தொழிற்பூங்கா.<br>5) திருநெல்வேலி கங்கை கொண்டான் சிப்காட் தொழிற் பூங்கா. |



| | |
|---|---|
| | 6) தூத்துக்குடி அல்லிக்குளம் சிப்காட் தொழிற் பூங்கா. |
| ஒன்றிய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்காக நிலஎடுப்பு செய்யப்படும் சில முக்கிய திட்டங்கள் | |
| தேசிய நெடுஞ்சாலைத்துறை / தேசிய நெடுஞ்சாலை ஆணையம் | 1) பெங்களூர் – சென்னை புதிய விரைவுச்சாலை.<br>2) சித்தூர் – தச்சூர் இணைப்புச்சாலை.<br>3) மதுரை வட்டச்சாலை.<br>4) மதுரை – ராஜபாளையம் – செங்கோட்டை – கேரள எல்லை இணைப்புச்சாலை.<br>5) மாமல்லபுரம் – புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை. |
| இரயில்வே | 1) தூத்துக்குடி – மதுரை அகல இரயில் பாதை அமைத்தல்.<br>2) தூத்துக்குடி – மதுரை (அருப்புக்கோட்டை வழி) அகல இரயில் பாதை அமைத்தல்.<br>3) வாஞ்சிமணியாச்சி – நாகர்கோவில் அகல இரயில் பாதை அமைத்தல். |

| | |
|---|---|
| | 4) திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை அமைத்தல்.<br>5) சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை அமைத்தல். |
| இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) | 1) தூத்துக்குடி சிறிய செயற்கைக்கோள் ஏவுதளம் அமைத்தல். |
| சென்னை பெட்ரோலிய கழகம் (சி.பி.சி.எல்) | 1) நாகப்பட்டினம் பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். |
| நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (என்.எல்.சி) | 1) கடலூர் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைத்தல். |

நில நிருவாகதுறையானது, மூன்று நிலஎடுப்பு சட்டங்களின் கீழ் சட்டப்பூர்வ அதிகாரங்களை செயல்படுத்தும் விதமாகவும், நிலஎடுப்பு நடவடிக்கைகளில் பல்வேறு செயலாக்க பணிகளை மேற்கொள்ளும் விதமாகவும், நிலஎடுப்பு அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடும் வகையிலும்



மற்றும் பல்வேறு நிலஎடுப்பு இனங்களில் அரசிற்கு உரிய ஆலோசனைகள் வழங்கும் விதமாகவும் மிக முக்கிய பணிகளை ஆற்றி வருகிறது. உதாரணமாக,

- சட்டப்பூர்வ வகையில் – மாநில நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 பிரிவு 15(1) மற்றும் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம், 1997 பிரிவு 3(1) – ன் கீழ் இறுதி நிலஎடுப்பு அறிவிப்புகளை ஒப்பளித்து அரசிதழில் வெளியிடுதல்.

- அலுவல் ரீதியான செயலாக்க வகையில் – ரூ. 10 கோடிக்கு மேற்பட்ட வரைவு தீர்ப்பாணைகளை ஒப்பளித்தல், புதிய நிலஎடுப்பிற்கான நிருவாக அனுமதிக்குரிய பிரேரணைகளை அரசிற்கு பரிந்துரைத்தல்

மற்றும் நிலஎடுப்பிற்கான சிறப்பு அலகுகளை பணிநீட்டிப்பு செய்தல்.

- மேற்பார்வை செய்யும் வகையில் – மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நி.எ) அலுவலர்களின் பணிகளை கண்காணித்து நிலஎடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்.

- ஆலோசனை வழங்கும் வகையில் – உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான வழக்குகள் மற்றும் சில குறிப்பிட்ட நிலஎடுப்பு இனங்கள் / வழக்குகள் மீது அரசிற்கு கருத்துருக்கள் / குறிப்புகள் வழங்குதல்.

மேற்கண்ட வகையில் கடந்த 2021 – 2022 ஆம் ஆண்டில் நிலநிர்வாக



ஆணையரகத்தில் கீழ்க்கண்டவாறு நிலஎடுப்பு பணிகள் தொடர்பான கருத்துருக்கள் / பிரேரணைகள் மீது இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

<u>அட்டவணை 3-5</u>

| **பல்வேறு வகையான கருத்துருக்கள் / பிரேரணைகள் விவரம்** | **2021 – 2022 ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்டவை** |
|---|---|
| நிர்வாக அனுமதிக்கான பிரேரணைகள் | 48 |
| பிரிவு3(1) / 15(1) / 11(1) –ன் கீழான அரசிதழ் வெளியீடுகள் | 282 |
| பிரிவு19(1) –ன் கீழான விளம்புகை வெளியீடுகள் | 24 |
| பிரிவு19(3) –ன் கீழான ஆணைகள் | 61 |
| வரைவு தீர்ப்பாணைகள் | 39 |

| | |
|---|---|
| மாநில அளவிலான தனிநபர் பேச்சுவார்த்தைக்குழு கூட்ட ஆணைகள் | 14 |
| பணி நீட்டிப்பு முன்மொழிவுகள் | 77 |
| மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்ட ஒப்புதல் | 21 |
| மொத்தம் | 566 |

மாநிலம் முழுவதும் பல்வேறு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு தேவையான நிலங்களை நிலஎடுப்பு செய்யும் பணிக்கென 55 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் கீழ்க்கண்டவாறு மொத்தம் 4575 சிறப்பு நிலஎடுப்பு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



## அட்டவணை 3-6

| வ. எண் | கேட்புத் துறை | தொடர்புடைய நிலஎடுப்பு சட்டங்கள் | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்களின் எண்ணிக்கை | இதர பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் | தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம் 1956 | 25 | 2063 |
| 2 | நெடுஞ்சாலைத் துறை | தமிழ்நாடு நெடுஞ் சாலைகள் சட்டம், 2001 | 15 | 752 |
| 3 | எரிசக்தித்துறை | தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 | 0 | 34 |
| 4 | சிப்காட் | | 7 | 774 |
| 5 | இரயில்வே | | 0 | 237 |
| 6 | விமான நிலையம் | | 2 | 88 |
| 7 | என்.எல்.சி | | 1 | 121 |
| 8 | சென்னை மெட்ரோ இரயில் | | 1 | 47 |
| 9 | சி.பி.சி.எல் | | 0 | 36 |
| 10 | எச்.பி.சி.எல் | | 0 | 13 |
| 11 | டிட்கோ | | 0 | 14 |
| 12 | தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் | | 0 | 2 |
| 13 | பாதுகாப்புத்துறை | நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம், 2013 | 0 | 26 |
| 14 | நீர்வளத்துறை | | 3 | 258 |
| 15 | இஸ்ரோ | | 1 | 106 |
| 16 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | | 0 | 4 |
| மொத்தம் | | | 55 | 4575 |

மேலே குறிப்பிட்டவாறு, பல்வேறு துறைகளுக்காக மேற்கொள்ளப்படும் நிலஎடுப்பு பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்தல், நிலஎடுப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ளுதல், நில எடுப்பிற்கான நிதி ஒதுக்கீடு பெறுதல் மற்றும் சிறப்பு நிலஎடுப்பு பணியிடங்களை தோற்றுவித்தல் / நீட்டிப்பு செய்தல் உள்ளிட்ட பணிகளை திறம்பட மேலாண்மை செய்யவும், மாநில அளவில் நிலநிர்வாக ஆணையரின்கீழ் தமிழ்நாடு நிலஎடுப்பு முகமை (LAATAN) என்ற சிறப்பு அமைப்பானது அரசாணை (நிலை) எண்.90, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 25.02.2022–இன்படி ஏற்படுத்தப்–பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு மாநில சமூக தாக்கமதிப்பீட்டு முகமையின் கீழ் 10 பணியிடங்களும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பிரிவின் கீழ் 13 பணியிடங்களும்



மற்றும் தமிழ்நாடு நிலஎடுப்பு முகமையின்மைய அலகின் கீழ் 17 பணியிடங்களும் ஆகமொத்தம் 40 பணியிடங்களை உள்ளடக்கியவாறு இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வமைப்பின் பணிகளை கண்காணிக்கவும், செயல்பாடுகளை மேம்படுத்தவும் கீழ்க்கண்ட அலுவலர்களை உள்ளடக்கிய வழிகாட்டும் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1) முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை – தலைவர்.
2) கூடுதல் தலைமைச் செயலாளர், தொழில்துறை – உறுப்பினர்.
3) கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை– உறுப்பினர்.
4) முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை – உறுப்பினர்.

5) சிறப்பு செயலாளர், நிதித்துறை– உறுப்பினர்.

6) நில நிர்வாக ஆணையர் ஒருங்கிணைப்பாளர்.

**3.9 அரசு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி அமைத்தலுக்கான அனுமதி**

அரசு நிலங்களில் குழாய் மற்றும் கண்ணாடி இழைக்கம்பி பதித்து, வணிகம் மற்றும் வணிகமற்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கு, தனி நபர், தனியார் அமைப்பு, நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண். 24–A–இன் கீழ் அரசால் நிர்ணயிக்கப்பட்ட தட வாடகை வசூல் செய்யப்படுகின்றது. ஆனால், விவசாயப் பயன்பாட்டிற்காக அரசு நிலங்களில் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்லப்படும்



இனங்களில் தட வாடகை அரசால் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**3.10 வருவாய் நிலஉடைமை ஆவணங்களை மேம்படுத்துதல்**

வருவாய் துறையினால் பராமரிக்கப்பட்டு வரும் கிராம நிலஉடைமை ஆவணங்கள் ஏற்கனவே கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றினை மேலும் மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கடந்த காலங்களில் வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக ஏற்கனவே தனிநபர்களிடமிருந்து நிலஎடுப்பு செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட வீட்டுமனை

பட்டாக்களில் 2.77 இலட்சம் இனங்கள் கண்டறியப்பட்டு 44,000 இனங்களுக்கு இணைய வழி பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2.33 இனங்களுக்கு 2022–2023ஆம் ஆண்டில் இணைய வழி பாட்டா வழங்கப்படும்.

மேலும், கடந்த காலங்களில் கிராம வருவாய் ஆவணங்களை கணினிமயமாக்கலின் போது பல்வேறு வகையான எழுத்து பிழைகள் மற்றும் தனிநபர்களின் நில உடைமைகளில் தவறான பதிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், அவற்றைக் களையும் விதமாக அரசாணை (நிலை) எண் 644 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள் 01.10.2021–இன் படி ஊரக பகுதிகளிளும் அரசாணை (நிலை) எண் 612 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள் 01.10.2021–ன் படி நகர் புறப் பகுதிகளிளும் தமிழ் நில இணையதளத்தில்



மாவட்ட ஆட்சியர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் மூலமாக மேற்கண்ட பிழைகளை சரிசெய்யும் பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த ஆண்டுகளில் அரசின் பல்வேறு வகையான திட்டங்களுக்காக தனிநபர்களின் பட்டா நிலங்களை நிலஎடுப்பு செய்தும், அரசிற்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களை நிலமாற்றம் மற்றும் நிலஉரிமை மாற்றம் செய்தும், பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் இதர அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து வகையான நிலஎடுப்பு, நிலமாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை சம்பந்தப்பட்ட கேட்புத் துறைகள்/

அமைப்புகளின் பெயரில் தமிழ்நில இணைய ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.11 சிறுபாசனப் புள்ளி விவர பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசனப் புள்ளி விவர பகுத்தாய்வுத் திட்டமானது நூறு சதவிகித மத்திய அரசு நிதியுதவியுடன், ஜலசக்தி அமைச்சகத்தின் நீர் வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு துறையின் கீழ் சிறுபாசனத் திட்டங்கள் குறித்த விரிவான புள்ளி விவரத் தொகுப்பினை உருவாக்கும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கமானது, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை சிறுபாசனக் கணக்கெடுப்பினை நடத்தி, அதன்மூலம் தெளிவான தரவுகளைத் தொகுத்து அளிப்பதோடு நிலத்தடி நீர் குறித்து ஆய்வு செய்தும், அவை கிடைக்கப் பெறும் தன்மையை



மதிப்பீடு செய்தும், நீர்வள மேம்பாடு குறித்தத் திட்டமிடுதலுக்கு உதவியாக இருப்பதாகும்.

**ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு (2017–18) மற்றும் நீர் நிலைக் கணக்கெடுப்பு**

தமிழகத்தில், நில நிர்வாக ஆணையர், மாநில சிறுபாசன கணக்கெடுப்பு ஆணையராக செயல்படுகிறார். இதுவரை 1986–87, மேற்கோள் ஆண்டாகக் கொண்டு தொடங்கி ஐந்து சிறுபாசனக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக 2017–18 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்புப் பணி நடைபெறுகிறது.

மத்திய அரசு, சிறுபாசனக் கணக்கெடுப்பின் நோக்கத்தினை மேலும் விரிவுப்படுத்தி நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்பும் சேர்த்து நடத்த தீர்மானித்துள்ளது. இதன் நோக்கமானது, நீர்

நிலைகள் குறித்த முக்கிய விவரங்களாகிய, நீர் நிலைகளின் எண்ணிக்கை, அளவு, அவற்றின் நிலை, வகை, பயன்பாடு, நீரைத் தேக்கி வைக்கும் திறன் போன்ற விவரங்களை சேகரிப்பதே ஆகும்.

இந்த கணக்கெடுப்பில், அனைத்து நீர் நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருப்பினும் கணக்கெடுக்கப்படுகின்றன. இத்தகைய தெளிவான, விரிவான புள்ளி இயல் தரவுகள், நீர் நிலைகள் குறித்த திட்டமிடலுக்கும், கொள்கை வகுத்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். நீர் நிலைகளின் புகைப்படங்கள் மற்றும் அட்ச ரேகை தீர்க்க ரேகை விவரங்கள் பிரத்யேக கைபேசிச் செயலி மூலம் எடுக்கப்பட்டு அவை மத்திய அரசின் வலை சேவையகத்தில் (Web Server) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.



ஆறாவது சிறுபாசன கணக்கெடுப்பு – 2017–18–ம் முதலாவது நீர் நிலைக் கணக்கெடுப்பும் நடத்தப்பட்டு தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது.

### 3.12.1 மின் ஆளுமை மூலம் அலுவலகக் கோப்புகள் அமைப்பு

நில நிர்வாகத் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து கோப்புகளை அனுப்பும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மிக எளிதாக மிக விரைவாகக் (ஒளிவு மறைவில்லா) கோப்பு பரிவர்த்தனைகள் நடைபெறவும், காகிதமில்லா அலுவலகம் அமைவதற்கு வழிவகை செய்கிறது.

இவ்வலுவலகத்தில் உள்ள அனைத்து அலுவலர்கள்/பணியாளர்களுக்கும் "உள்நுழை" விவரங்கள் உருவாக்கப்பட்டு, கோப்புகள் அந்தந்த அலுவலர் படிநிலைப்படி (Hierarchy) மின் ஆளுமை கோப்பு அமைப்பின் மூலமாகவே

அனுப்பப்படுகின்றன. இது வரை 8000–க்கும் மேற்பட்ட தபால்கள் இதன் மூலம் செயல்பட்டுவருகின்றன.

மேலும், 38 மாவட்ட வருவாய் அலுவலர் / தனி மாவட்ட வருவாய் அலுலவர் / அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் உள்நுழையீட்டு விவரங்கள் உருவாக்கப்பட்டு அனைவருக்கும் தக்க பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

### 3.12.2 பட்டா மாற்ற மேல்முறையீடு மேலாண்மை அமைப்பு (PTAMS)

வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் விசாரணை செய்யப்படும் பட்டா மாற்ற மேல்முறையீடுகள் குறித்து நில நிர்வாக ஆணையாரால் "பட்டா மாற்ற மேல்முறையீடு மேலாண்மை அமைப்பு (PTAMS)" மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.



### 3.12.3. நில நிருவாக ஆணையரக கணினி மயமாக்கும் திட்டம் (CLAP)

நில மாற்றம், நில உரிமை மாற்றம் மற்றும் குத்தகை வழங்குதல் தொடர்பான முன்மொழிவுகள் துரிதமாக பரிசீலித்து ஆணை பெற கிராம நிர்வாக அலுவலர் முதல் அரசு வரையில் முன்மொழிவுகள் இணைய தளம் வாயிலாக பெற்று காகிதமில்லா நிலையினை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இணைய முகப்பு உருவாக்கப்பட்டு "நில நிருவாக ஆணையரக கணினி மயமாக்கும் திட்டம் (CLAP)" மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


## 4. நிலச்சீர்திருத்தம்

நில சீர்திருத்த ஆணையரகம் விவசாய நிலங்களுக்கான நிலஉச்சவரம்பு சட்டம், நிலகுத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச்சட்டம், பூமிதான சட்டம் மற்றும் வேளாண்மை வருமானவரி தொடர்பான பணிகளை செயல்படுத்தி வருகிறது. மேலும், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் புரிவோர்களுக்கும் அவர்களது குடும்ப நபர்களுக்கும் முழுமையானசமூகபாதுகாப்பு வழங்கும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டமும் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.



### 4.1 நிருவாக கட்டமைப்பு நிலச்சீர்திருத்தத் துறை நிருவாக கட்டமைப்பு பின்வருமாறு:–

**அட்டவணை – 4.1**



**4.2 நிலச்சீர்திருத்த சட்டத்தின்படி உள்ள உச்சவரம்பு**

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் 1961–இன்படி ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 தர ஏக்கர் (Standard Acres) நிலமும், குடும்பத்தில் 5 உறுப்பினர்களுக்குக் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கர் நிலமும் அனுமதிக்கப்பட்டது. ஆனால் ஒரு குடும்பத்திற்கு ஒட்டுமொத்த உச்சவரம்பாக 60 தர ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டது. அது தவிர, குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சீதன நிலமாக 10 தர ஏக்கர் நிலம் கூடுதலாக அனுமதிக்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தத்தின் பயன்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதன்மைச் சட்டத்திலுள்ள நடைமுறைகளை மேலும்



சீர்படுத்தி தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு குறைத்தல்) சட்டம், 1970 (தமிழ்நாடு சட்டம் 17/1970) இயற்றப்பட்டது. அதன்படி, 5 நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கான விவசாய நிலத்தின் உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. மேலும், முதன்மைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/1961) ஒரு குடும்பத்திற்கு (5 நபருக்கு மேல் இருந்தால்) நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவினை, தமிழ்நாடு சட்டம் 20/1972 (திருத்தச் சட்டம் 20/1972)–இன் மூலம் 40 தர ஏக்கர் அளவிற்கு குறைக்கப்பட்டது. பின்னர், இந்த ஒட்டுமொத்த உச்சவரம்பானது 30 தர ஏக்கர் அளவாக தமிழ்நாடு சட்டம் 39/1972–இன் மூலம் குறைக்கப்பட்டது. தற்போது நடைமுறை–யிலுள்ள நில உச்சவரம்பு அளவு பின்வருமாறு:–

| வரிசை எண் | வகைபாடு | அனுமதிக்கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| (i) | தனிநபர், நிறுவனம், சொசைட்டி, தனியார் அறக்கட்டளை | 15 தர ஏக்கர் |
| (ii) | 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம்<br>(ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு 5 தரஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது.<br><br>ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு | 15 தர ஏக்கர்<br><br>30 தர ஏக்கர் |
| (iii) | ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் 15.2.1970 அன்று நிலங்கள் அவர்களது பெயரில் இருந்தால், சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு | 10 தர ஏக்கர் |
| (iv) | 1.3.1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public trust of religious nature) | சட்டத்திற்குள் வராது |
| (v) | 1.3.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public trust of charitable nature) | 5 தர ஏக்கர் |
| (vi) | 1.3.1972 தேதிக்கு பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக் கான உச்சவரம்பு | இல்லை<br><br>(ஆனால் திருத்தப்பட்ட சட்டம் 29/87–சட்டத்தின்படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக்கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது) |



### 4.2.1 தொழில் / வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

- நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37–A மற்றும் விதிகளின்படி, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், 15 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக் கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.

- இதற்கு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- திருத்திய சட்டம் 2018– இன்படி, ரூபாய் 20 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் புஞ்சை நிலம் மட்டும் வைத்திருக்கும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30 தர ஏக்கராக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின்சக்தி, காற்றாலை மற்றும் பலவற்றுக்காக தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டப் பிரிவு



37–A இன்கீழ் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

### 4.2.2 பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி

- நிலச்சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37–B மற்றும் விதிகளின்படி, பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக் கொள்வதற்கு அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.
- இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டப்பிரிவு 37–A மற்றும் 37–B இன் கீழ்

அனுமதி பெறும் நடைமுறையை எளிமையாக்கும் நோக்கில் இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

### 4.3 வருவாய்நீதிமன்றங்கள்

நில உடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை, குத்தகைச் சட்டங்களின் கீழ் முடிவு செய்வதற்காக, தற்போது மாநிலத்தில் பத்து வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி, லால்குடி, நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.



#### 4.3.1 குத்தகைச் சட்டங்கள்

கீழ்க்கண்ட சட்டங்கள் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| (i) | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55) இன் படி நில உடைமையாளர்கள் குத்தகைதாரர்களை குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. |
| (ii) | தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56) இன்படி நில உரிமைதாருக்கு பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகைசெய்கிறது. |
| (iii) | தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)–இன்படி பொது அறக்கட்டளைகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே உள்ள உறவை வரன்முறைப்படுத்தவும், அவர்களிடையே ஏற்படும் தகராறுகளை தீர்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| (iv) | தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு |

| | |
|---|---|
| | சட்டம் 10/69)–இன்படி பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாக பதிவுசெய்து அவர்களின் உரிமையை பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| (v) | தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்தியவாறு இன்படி, குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து, 1.4.1990 தேதியில் அனுபவித்துவரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கும் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்கும் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. |

### 4.3.2 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

**1.4.2021 முதல் 28.02.2022 வரை**

| | | |
|---|---|---|
| 1 | 31.3.2021 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 2,865 |
| 2 | 1.4.2021 முதல் 28.02.2022 வரை வரப்பெற்ற வழக்குகள் | 2,428 |
| 3 | முடிவு செய்யப்பட்டவை | 2,170 |
| 4 | 28.02.2022 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள் | 3,123 |



### 4.3.3 விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும், (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் பொறுத்தவரை தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969 செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.4 பூமிதான வாரியம்

பூமிதான இயக்கம் ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் 1951 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. நிலச்சுவான்தார்கள் மனமுவந்து அளித்த நிலதானமே இந்த இயக்கத்தின் சிறப்பாகும். ஆச்சார்ய வினோபாபாவே அவர்கள் தமிழ்நாட்டில் 13.03.1956 முதல் 18.04.1957

வரை பல்வேறு மாவட்டங்களில் பாதயாத்திரையாக சுற்றுப்பயணம் செய்து 28,050 ஏக்கர் நிலங்களை பூமிதான இயக்கத்திற்கு தானமாக பெற்றார்.

பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தால் பராமரிக்கப்பட்டு மற்றும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது பூமிதான நிலங்களை முறைகேடான முறையில் விற்பனை செய்வதை தடுக்க தமிழகத்தில் உள்ள பூமிதான நிலங்களின் நிலமதிப்பு '0' மதிப்பீடாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்த நிலையில் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## 4.5 விவசாயத் தொழிலாளர்கள்நலத்திட்டங்கள்

தமிழக விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கென 1998ஆம் ஆண்டில் முன்னாள் நிலச்சீர்திருத்த ஆணையரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம் அமைக்கப்பட்டு, 2001–ஆம் ஆண்டு “தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் 2001 “செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 7,32,130 நபர்கள், உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டனர்.

2005–ஆம் ஆண்டு, மேற்குறிப்பிட்ட திட்டத்திற்குப் பதிலாக, “தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்"

என்ற திட்டம் 15.08.2005 முதல் செயல்படுத்தப்பட்டு. அந்த திட்டத்தின் கீழ் 66,49,895 குடும்ப அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு 2,02,73,879 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டனர். இந்ததிட்டத்தின் கீழ் 3,39,150 பயனாளிகளக்கு ரு.90.81 கோடி நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டன.

இதன் பின்னர் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நன்கு பயனடையும் வகையில், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம், 2006 (தமிழ்நாடு சட்டம் 29/206) என்ற தனிச்சட்டம் இயற்றப்பட்டது. மேற்கண்ட சட்டத்தின் அடிப்படையில், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 2006 என்ற



சமூகப் பாதுகாப்புத் திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டமானது 22.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ், பதிவுபெற்ற உறுப்பினர்களுக்கு பிறப்பு முதல் இறப்புவரை, அதாவது, திருமணம், மகபேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு, இயற்கை மரணம், விபத்துமரணம் / விபத்துகாயங்களால் உடல் உறுப்பிழப்பு, ஈமச்சடங்கு மற்றும் முதியோர் ஒய்வூதியம் மற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி, திருமண உதவித்தொகை ஆகியவற்றை வழங்க வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரம், தலைவர், இணைத்தலைவர், அலுவல்சாந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட, அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயத்

தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 22.12.2006 முதல் 10.09.2011 வரை 76,46,293 குடும்பங்களுக்கு குடும்ப அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் மொத்தம் 1,74,83,172 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டனர். இத்திட்டத்திற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,98,365 பயனாளிகளுக்கு ரூ.660.91 கோடி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்காணும் சட்டத்தினை நீக்கரவு செய்து அரசாணை (நிலை) எண். 265, வருவாய் (நி.சீர்.1(2)) துறை, நாள் 10.09.2011இன் படி தமிழ்நாடு விசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமுகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006–க்கு பதிலாக 10.09.2011 முதல் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்த அரசால் ஆணையிடப்பட்டது.



### 4.6 முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011

**தகுதிகள் மற்றும் உறுப்பினர் பதிவு விவரம்**

விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்கள்.

உள்ளூர் மீன்படி தொழில், பால்பண்ணை தொழில், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை, மரங்கள் வளர்த்தல் போன்ற தொழில்கள் செய்பவர்களும் விவசாயத் தொழிலாளர்களாக கருதப்படுவார்கள்.

2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திலிருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் குறு/ சிறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள்.

➢ இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்கள் மூல உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.

➢ மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள் சார்நது வாழும் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.

➢ இத்திட்டத்தின்கீழ் 28.02.2022 வரை பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை 4–1**

**உறுப்பினர்களின்விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | மூல உறுப்பினர்கள் | **1,47,32,076** |
| 2. | மூல உறுப்பினரைச் சார்ந்தவர்கள் | **1,35,74,370** |
| | மொத்தம் | **2,83,06,446** |

இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட நல உதவிகள் வழங்கப்படுகின்றன.

**உறுப்பினர்களுக்காக,**

➢ திருமண உதவித்தொகை



➢ முதியோர் ஓய்வூதியம்

➢ தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி

➢ விபத்துநிவாரணம்

➢ இயற்கை மரண உதவித்தொகை

➢ ஈமச் சடங்கு செலவு

**உறுப்பினரைச் சார்ந்தவர்களுக்காக,**

➢ கல்வி உதவித்தொகை

➢ திருமண உதவித்தொகை

➢ எச்.ஐ.வி –யினால் உயிரிழந்த விவசாய உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை

➢ ஈமச்சடங்கு செலவு

அரசாணை (நிலை) எண்.86, வருவாய் (நிசீ. 1(2)) துறை, நாள் 20.2.2014 இன்படி, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் 1.4.2014 முதல் வருவாய் நிர்வாகத் துறை மூலம் வழங்கப்படுகிறது.

## 4.6.1 நிதியுதவி

இத்திட்டத்தின் கீழ், கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

**மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்துவாழும் உறுப்பினர்களுக்கான நலத் திட்ட உதவிகளின் விவரம்**

**அட்டவணை4.2**

| மூலஉறுப்பினர்களுக்காக | உதவித்தொகைவிவரம் |
|---|---|
| 1. திருமணஉதவித்தொகை : | ஆண்களுக்குரூ.8000/– பெண்களுக்குரூ.10,000/– |
| 2. முதியோர்ஓய்வூதியம் | மாதம்ரூ.1000/– |
| 3. உறுப்பினர்களின்தற்காலிக உடல்திறனற்றகாலத்திற்கானமாதாந்திரஉதவி<br>i. காசநோய்<br>ii. புற்றுநோய்<br>iii. எச்.ஐ.வி / எய்ட்ஸ்<br>iv. டயாலிசிஸ் (Dialysis)<br>v. கை, கால் முறிவு மற்றும் நிலை குலைவு<br>vi. நரம்பு சம்பந்தமான நோய்<br>vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு<br>viii. இதயநோய்<br>ix. பார்வை இழத்தல்<br>x. கல்லீரல் நோய்<br>xi. சிறுநீரக நோய்<br>xii. மனநிலை பாதிப்பு<br>xiii. அரிவாள் செல் ரத்த சோகை<br>xiv. ரத்த அழிவு சோகை<br>xv. ரத்த உறையா நோய் | **மாதம்ரூ.1000/–** |
| 4. விபத்து நிவாரணம் | மரணம்ரூ.1,00,000/–<br>விபத்து காயங்களுக்கு ஏற்ப ரூ.20,000 முதல் ரூ.1,00,000/–வரை |
| 5. இயற்கை மரண உதவித் தொகை | ரூ.20,000/– |
| 6. ஈமச்சடங்கு செலவு | ரூ.2,500/– |



| சார்ந்து வாழும் உறுப்பினர் | உதவித் தொகை விவரம் |
|---|---|
| 1. கல்வி உதவித் தொகை | தொழிற்பயிற்சி/ பல்தொழில்நுட்ப பயிற்சி முதல் முதுநிலை தொழிற் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1250/– முதல் ரூ.6750/– வரை வழங்கப்படுகிறது. |
| 2. திருமண உதவித்தொகை | ஆண்களுக்கு ரூ.8000/–<br>பெண்களுக்கு ரூ.10,000/– |
| 3. எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை. | மாதம் ரூ.1000/– வீதம் 18 வயது வரை வழங்கப்படுகிறது. |
| 4. ஈமச்சடங்கு செலவு | ரூ.2,500/– |

## 4.6.2 செயலாக்கம் (Performance)

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 31.03.2022 வரை ரூ.2,253.79 கோடி 32,64,775 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**நிதி மற்றும் பயனாளிகள் விவரம்**

**நிதி மற்றும் பயனாளிகள் விவரம்**

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011 இன் கீழ் 2021–2022 செலவினம் மற்றும் பயனாளிகள் விவரம் பின்வருமாறு

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு | பயனாளிகளின் எண்ணிக்கை | | | செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| | | | இதர உதவிகள் | ஓய்வூதிய திட்டம் | மொத்தம் | |
| 2021-22 (31.03.2022) | 187.22 | 172.13 | 1,47,390 | - | 1,47,390 | 91.94 |



**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் ஆண்டில் (31.03.2022 வரை) வழங்கப்பட்ட உதவி விவரம்**

**அட்டவணை 4–3**

| வ. எண். | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்வி | 11.07 | 45,491 |
| 2. | உறுப்பினர்களின் திருமணம் | 2.90 | 3,470 |
| 3. | உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம் | 11.49 | 13,527 |
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு | 89.89 | 40,966 |
| 5. | விபத்து நிவாரணம் | 9.51 | 940 |
| 6. | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 46.59 | 42,424 |
| 7. | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை | 0.68 | 572 |
| **மொத்தம்** | | ***172.13*** | **1,47,390** |

## 4,7 நீடித்த வளர்ச்சி இலக்கு 2030 – நிலச் சீர்திருத்தத் துறையின் பங்கு

2015 ஆம் ஆண்டு ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030 ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திட்டம், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மக்களுக்கு அமைதியையும் செழிப்பையும் வழங்கத்தக்க வரைவொன்றை தன்னகத்தே கொண்டுள்ளது, நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030, வறுமை ஒழிப்பையும், நலவாழ்வு மற்றும் கல்வியறிதலை மேம்படுத்துவதையும், சமமற்றத் தன்மையைக் களைவதையும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் மட்டுமல்லாது காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதையும், காடுகள் மற்றும் கடல்களைப் பாதுகாப்பதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டது.



| | | |
|---|---|---|
| நீடித்த வளர்ச்சி இலக்கு 1 | : | அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல். |
| நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4 | : | 2030ஆம் ஆண்டிற்குள், குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாகும் மக்கள் உட்பட அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருளாதார வளங்கள், அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துதல், நிலத்தின் மீதான உரிமை, பாரம்பரியம், இயற்கை வளங்கள், உரிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறு மூதலீடுகளை உள்ளடக்கிய நிதியுதவிகள் வழங்குவதை உறுதிசெய்தல். |

நிலச்சீர்திருத்தத் துறை, துறை சார்ந்த திட்டங்களின் வாயிலாக ஏழை எளிய

மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் வாயிலாக நிலமற்ற கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் வாயிலாக வேளாண் நில உரிமையின்பாலுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு ஏழை கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது. மேலும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பூமிதான நிலங்கள் வினியோகத்தின் வாயிலாக வேளாண் வளர்ச்சியையும், வறுமை ஒழிப்பையும் அடைய ஆவன செய்கிறது.

இதுவே, மேற்காணும் நீடித்த வளர்ச்சி இலக்கு 1 மற்றும் நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4–ல் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைவதற்கான வழி வகையாகும்.



இந்த இலக்கு மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் வேளாண்மை சார்ந்த பல்வேறு பணிகளில் ஈடுபடும் வேளாண்மை தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பதன் வாயிலாக, ஏழைத் தொழிலாளர்களை பாதுகாத்து நியாயமான கூலியை வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.3 | : | 2030 ஆம் ஆண்டிற்குள், தேசிய அளவில் பொருத்தமான சமூகபாதுகாப்பு முறைகளை அனைத்து நிலைகளிலும் குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்கு உட்படுவோர் பெறும் வண்ணம் நடைமுறைப்படுத்துதல். |

இத்துறை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தினை செயல்படுத்துவதன் வாயிலாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரைப் பாதுகாக்கும் வகையில் நிதியுதவி அளிப்பதன் மூலம் சமூகப் பாதுகாப்பை வழங்குகிறது. மேலும், அக்குடும்பத்தைச் சார்ந்த முக்கிய உறுப்பினர் நோய்வாய்ப்பட்டு தற்காலிகமாக செயல்பட முடியாத வேளையில் அக்குடும்பத்திற்கு தேவையான நிதி உதவி அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு நிதி உதவிகளின் வாயிலாக மேற்காணும் குறிக்கோளை அடைய ஏதுவாகிறது.



## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை

நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி, ஆணையரகம், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச்சட்டம் 1966 / திருத்தச் சட்டம் 1991 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 ஆகிய இரு சட்டக் கூறுகள் தொடர்பான பொருளைக் கையாளும் பணிகளைச் செய்து வருகிறது. நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, 16.6.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது.

### 5.1 தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1978

நகர்ப்புற நிலங்களின் மீதான தனியுரிமையை தடுக்கவும், நகர்ப்புறச் சந்தைகளில் நிலப் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தவும், நிலங்களின் விலை ஏற்றத்தைத் தடுக்கும் நோக்கத்துடனும் 1978–ஆம் ஆண்டு 03.08.1976 முதல் முன்மேவு

பலனுடன் உச்சவரம்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கூறுகள் சென்னை நகரில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு, மேலும் சென்னை புறநகர்ப் பகுதிகளுக்கும் கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 நகரக் கூட்டுப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டன. இச்சட்டத்தின்படி நகரக் கூட்டுப் பகுதியில் ஒரு தனிநபர் கைப்பற்றில் வைத்துக் கொள்ளக்கூடிய வெற்று நகர்ப்புற நிலங்களின் மீது உச்ச வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது.

**அட்டவணை 5.1**

| வ. எண். | நகரக் கூட்டுப்பகுதியின் பெயர் | தனி நபர் ச.மீ | குடும்பம் (4 நபர்கள் கொண்டது ) ச.மீ | தொழில் நிறுவனம் ச.மீ |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 500 | 2000 | 2000 |
| 2. | மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் | 1500 | 3000 | 3000 |
| 3. | திருநெல்வேலி | 2000 | 4000 | 4000 |



## 5.2 நில உச்சவரம்பு நீக்கறவுச் சட்டங்கள்:

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைபடுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 20/1999–இன்படி, 16.06.1999 முதல் முதன்மைச் சட்டம் நீக்கறவு செய்யப்பட்டது. நீக்கறவுச் சட்டத்தின் உட்கூறு 3(1)(a)–இன் கீழ் பின்வருமாறு காப்புரை வழங்கப்பட்டது.

3(1) முதன்மைச் சட்டத்தின் நீக்கறவு

(a) உட்சட்டப்பிரிவு 11(3)–இன் கீழ் மாநில அரசால் அல்லது மாநில அரசால் இதற்காக உரிய அதிகாரம் அளிக்கப்பட்ட எந்தவொரு நபரால் அல்லது தகுதி வாய்ந்த அலுவலரால் உடைமை கொடுக்கப்பட்ட எந்தவொரு வெற்று நிலமும் அரசு வசம் இருப்பதை பாதிக்காது.

## 5.3 அறியாமல் கிரயம் பெற்றோர் திட்டம்

1978 ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் அரசால் கையகப்படுத்தப்பட்ட

நிலங்கள்/ வீட்டுமனைகளை பல ஆண்டுகளுக்கு முன்னதாக எண்ணற்ற நபர்கள் கிரயம் பெற்றிருந்தனர். கிரயத்தின் போது கிரயம் செய்த நபரோ, அல்லது கிரயம் பெற்ற நபரோ நிலம் கையகப்படுத்தப்பட்ட விவரத்தைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அவ்வாறு கிரையம் பெற்றவர்களால் பட்டா பெற இயலவில்லை. மேலும், தங்களது சொத்தினைப் பராமரிக்க பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1998–ஆம் ஆண்டு இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு அளிக்க அரசு முடிவு செய்து அரசாணை எண்.649 வருவாய்த் துறை, நாள்.29.7.2008–வாயிலாக "அறியாக் கிரயம் பெற்றோர்" திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

ஒரு குறிப்பிட்ட நகரக்கூட்டுப்பகுதியில் நிலத்தைக் கையகப் படுத்தியபோது, அப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட மண்டல



மதிப்பை அடிப்படையாகக் கொண்டு அறியாக் கிரயதாரர்களால் செலுத்தப்பட வேண்டிய நிலமதிப்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் மேற்காணும் அரசாணைக்குப் பதிலாக திருத்திய விதிகள் / நெறிமுறைகளுடன் கூடிய அரசாணை எண்.565, வருவாய்த்துறை நாள் 26.9.2008 பிறப்பிக்கப்பட்டது. எனினும் நிலமதிப்புத் தொகையில் எந்த மாற்றமும் செய்யப்படாமல் முந்தைய நிலமதிப்பே பின்பற்றப்படுகிறது.

இதுவரை 4580 இனங்களில், அறியாக்கிரயதாரர்களால் ரூ. 34.34 கோடி நிலமதிப்புத் தொகை செலுத்தியதின் பெயரில் 10,34,616 சதுர மீட்டர் விஸ்தீரண நிலம் வரன்முறை செய்யப்பட்டுள்ளன.

**5.4 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச்சட்டம் 1966**

மாநிலத்தின் வளங்களைப் பெருக்கவும், நகர்ப்புற பகுதிகளில் வேளாண் நிலங்கள் தன்மை மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்குடனும், வரிவிதிப்புத் திட்டத்தை பகுத்தறியும் நோக்குடனும் முதன்மைச் சட்டம் 1966 இயற்றப்பட்டது. இச்சட்டம் முதன் முதலாக சென்னை நகரில் 1.7.1963 முதல் முன்மேவு பலனுடன் நடைமுறைப்படுத்தப்–பட்டது. ஒரு துணை மண்டலத்தில் அடங்கிய நகர்ப்புற நிலங்களின் சந்தைமதிப்பின் சராசரியில் 4% நகர்ப்புற நிலவரியாக விதிக்கப்பட்டது. நகர்ப்புற நிலவரியானது இரயத்துவாரி மதிப்பீடு, மனைத் தீர்வை, விடுவரி ஆகியவற்றுக்குப் பதிலாக செலுத்தத்தக்கது.

**5.5 முதன்மைச் சட்டம் 1966– நீட்டிப்பு**

இச்சட்டம் 1.7.1971 முதல் கோயம்புத்தூர், சேலம், முதலான நகராட்சிகளுக்கும்



திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை நகரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

இச்சட்டம் 1.7.1975 முதல் சென்னை நகரின் எல்லை பகுதிகளிலிருந்து 16 கி.மீ. தொலைவு வரை உள்ள புற எல்லைப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

பின்னர் இச்சட்டம் 1.7.1981 முதல் திருநெல்வேலி நகரக் கூட்டு பகுதி மற்றும் கோயம்புத்தூர், சேலம், திருச்சி நகரக் கூட்டு பகுதிகளின் புற எல்லை பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச்சட்டம் 1966 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 ஆகியவற்றின் கீழ் கவரப்படும் பகுதிகள் அனைத்தும் 1.7.1981 முதல் சம எல்லை உடையதாக ஆக்கப்பட்டன.

## 5.6 நகர்ப்புற நிலவரி திருத்திய வரி வீதம்

நகர்ப்புற நிலவரி வரிவீதம் 3 முறை அதாவது 1.7.1971, 1.7.1972 மற்றும் 1.7.1975 முதல் திருத்தம் செய்யப்பட்டது. அரசாணை (நிலை) எண்.2625, வருவாய்த்துறை, நாள்.27.12.1976–இன்படி இறுதியாகப் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது.

**அட்டவணை 5–2**

**வரி வீதம்**

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப்பகுதி நகர்ப்புற நிலங்கள் மட்டும் | |
|---|---|---|---|
| நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு | வரி வீதம் | நகர்ப்புற நிலத்தின் பரப்பளவு | வரி வீதம் |
| முதல் 2 மனைகள் வரை | வரி இல்லை | முதல் 3 மனைகள் வரை | வரி இல்லை |
| மொத்தப் பரப்பளவு 2 மனைகளுக்கு மேல் 5 மனைகளுக்கு மிகாமல் | 0.7% | மொத்தப் பரப்பளவு 3 மனைகளுக்கு மேல் 7 மனைகளுக்கு மிகாமல் | 0.7% |
| மொத்தப் பரப்பளவு 5 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்கு மிகாமல் | 1% | மொத்தப் பரப்பளவு 7 மனைகளுக்கு மேல் 10 மனைகளுக்கு மிகாமல் | 1% |
| மொத்தப் பரப்பளவு 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்கு மிகாமல் | 1.5% | மொத்தப் பரப்பளவு 10 மனைகளுக்கு மேல் 20 மனைகளுக்கு மிகாமல் | 1.5% |
| மொத்தப் பரப்பளவு 20 மனைகளுக்கு மேல் | 2% | மொத்தப் பரப்பளவு 20 மனைகளுக்கு மேல் | 2% |



## 5.7 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரித் திருத்தச் சட்டம், 1991

இச்சட்டம் 01.07.1991 முதல் சட்ட எண். 1/1992–இன்படி திருத்தம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் சட்டக்கூறுகள் ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம், கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப்பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம் மற்றும் நாமக்கல் ஆகிய 21 சிறப்பு நிலை / தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் கொடைக்கானல், மேட்டூர் ஆகிய 2 நகரியங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன.

## 5.8 நடப்பு பசலி ஆண்டு 1431–இல் நிர்ணயிக்கப்பட்ட கேட்பு

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966, திருத்தச் சட்டம் 1991 நடைமுறைபடுத்தப்–பட்டதிலிருந்து மாநிலத்தில் 24 மாவட்டங்களில் நகர்ப்புற நிலங்களாக அறிவிக்கை செய்யப்பட்ட முழுமையாக/ பகுதியாக கவரப்படும் பகுதிகளில் இதுவரை 1.90 இலட்சம் வரிவிதிப்புதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளன. நடப்புப் பசலி ஆண்டான 1431–இல் நகர்ப்புற நிலவரி கேட்புத் தொகையாக ரூ. 18.36 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது.

**சட்டமுறை விலக்களிக்கப்பட்டுள்ள இனங்கள்**

29(எ) மாநில / மத்திய அரசுக்குச் சொந்தமான நிலங்கள்.

29(பி) உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்கள்.

29(சி) பொதுமக்கள் வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள்,



29(டி) அரசு மருத்துவமனைகள் அமைந்துள்ள நிலங்கள் / மாநில அல்லது மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறும் மருத்துவமனை அமைந்துள்ள நிலங்கள்.

29(இ) இடுகாடு / சுடுகாடு பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எஃப்) பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலைகள் அமைந்துள்ள நிலங்கள்.

29(ஜி) நிலத்தைப் பயன்படுத்துபவரிடமிருந்து வருவாய் ஈட்டாத பொது நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எச்) மாநில மற்றும் மத்திய அரசால் உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கச் சொந்தமான பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(ஐ) பொதுப் பூங்காக்கள், பொது நூலகங்கள் மற்றும் அரசு அருங்காட்சியகங்கள் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(ஜெ) ஆதரவற்றோருக்கு அடைக்கலமளிக்கும் நோக்கத்திற்காகப் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(கே) அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட மதச்சார்பு /அறக்கட்டளை/ தொண்டு

நிறுவனங்களின் பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

29(எல்) பழைமையான நினைவுச் சின்னங்களை பேணிக்காக்கும் நோக்கத்திற்காக பயன்பாட்டில் உள்ள நிலங்கள்.

**சலுகைகள் வழங்கப்பட்டுள்ள இனங்கள்**

1. நில உரிமையாளர் குடியிருந்து வரும் கட்டடம் அமைந்துள்ள நகர்ப்புற நிலத்திற்கு 50% வரிச்சலுகை

2. அனைத்து இசை மற்றும் நாடக மன்றங்கள் அல்லது அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்கு 50% வரிச்சலுகை

3. திரையரங்குகளுக்கு 10% வரிச்சலுகை

4. நில உரிமையாளர் குடியிருந்து வரும் நகர்ப்புற நிலத்தில் உரிமையாளருக்குச் சொந்தமான தொழில் நிறுவனம் இயங்கி வந்தால், சிறு–தொழில் நிறுவனத்திற்கான உரிய சான்று பெறப்பட்டிருப்பின் 25% வரிச்சலுகை மற்றத் தொழில் நிறுவனங்களுக்கு 10% வரிச்சலுகை.

5. சென்னை நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சட்டப்பிரிவு 3(பி)–இன் கீழ் குடிசைப்பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களுக்கு முழு வரிவிலக்கு.



## 6. <u>நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை</u>

மாநிலம் முழுவதும் நில அளவைப்பணி மேற்கொள்வதும் அது தொடர்பான நில ஆவணங்களை உருவாக்கிப் பராமரிப்பதும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையின் பணியாகும். இத்துறை 1858 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சங்கிலி, நேர்கோணக்கட்டை மற்றும் தியோடலைட் ஆகிய கருவிகளைக் கொண்டு பல்வேறு முறைகளைக் கடைபிடித்து மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப்புலங்களுக்குமான நில ஆவணங்களை உருவாக்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, தினந்தோறும் ஏற்படும் நிலஉரிமை மாற்றங்களுக்கேற்ப நிலஆவணங்களில் மாற்றங்கள் செய்து பராமரிப்பது மட்டுமல்லாமல், இத்துறை கையினால் தயாரிக்கப்பட்ட நிலஆவணங்கள், புலப்படங்கள், வரைபடங்கள் ஆகியவற்றைக்

கணினிப்படுத்தி, பொதுமக்கள் எளிதாக உபயோகிக்கும் வகையில் இணையவழி சேவைக்குக் கொண்டு வந்துள்ளது. நடப்பாண்டில் (2022–23), விடுபட்ட நிலஆவணங்கள் மற்றும் வரைபடங்களைக் கணினிப்படுத்தி இணையவழி சேவைக்குக் கொண்டு வரவும் மற்றும் நவீனநில அளவைக்கருவிகளான வகையீட்டுப் பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நிலஅளவைக்கருவி ஆகியவற்றைப் பயன்படுத்தி படிப்படியாக மாநிலம் முழுவதும் நிலஅளவை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## 6.1 நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

### (i) எழுத்துருவிலான நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் (மாற்றியமைக்கத்தக்கது)

| ஆவண வகை | ஆவணத்தின் பெயர் | கணினிப்படுத்துதல் | இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை (மின் சேவை மற்றும் அலைபேசி செயலி மூலமாக பொது மக்கள் பார்வையிடும் வசதி உள்ளவை) |
| --- | --- | --- | --- |
| கிராமம் | அ–பதிவேடு மற்றும் சிட்டா | 311*/ 313 வட்டங்கள் 4.03 கோடி (வால்பாறை * (ம) கொல்லிமலை ** வட்டங்கள் மற்றும் இதர விடுபட்ட புலஎண்கள்தவிர்த்து) | ஆம் (அனைத்து மாவட்டங்களும்) |
| நகர்ப் புறம் | நகரநிலப்பதி வேடு/ நிலையானநி லஆவணம் | 14 / 14 வட்டங்கள் 89 / 89 நகராட்சிகள் 17***/ 18 மாநகராட்சிகள் (37.87 இலட்சம்) | ஆம் (அனைத்து மாவட்டங்களும்) |
| நத்தம் | அடங்கல் | 1.44 கோடி / 1.44கோடி ஆவணங்கள் (2018 வரை நிகழ் நிலைப்படுத்தப் பட்டவை) | இல்லை (மென்பொருள் தேசிய தகவலியல் மையத்தினால் உருவாக்கப் படவுள்ளது) |

* *வால்பாறை – நீதிமன்றவழக்கின் காரணமாக நிலவரித்திட்டப்பணி நிலுவையிலுள்ளது*

** *கொல்லிமலை – 10/16 கிராமங்களில் நிலவரித்திட்டப்பணி நிறைவு பெற்று தரவினை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. 6/16 கிராமங்களில் நிலவரித் திட்டப்பணி நடைபெற்று வருகிறது.*

*** *நாகர்கோவில் மாநகராட்சியில் மறுநிலவரித் திட்டப்பணி நடைபெற்று வருகிறது.*

## (ii) கையினால்தயாரிக்கப்பட்டநிலப்பதிவுருக்கள்– (ஒளிபிம்பநகலெடுக்கப்பட்டவை – மாற்றியமைக்கத்தக்கதல்ல –பார்வையிட மட்டும்)

| ஆவண வகை | ஆவணத்தின் பெயர் | ஒளிபிம்ப நகலெடுக்கப் பட்டவை | இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமம் | அ–பதிவேடு | 12,551 / 16,743 (கிராமங்கள்) | இல்லை (மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது) |
| நகர்ப்புறம் | நகரநிலஆவணம் | தொடங்கப் படவுள்ளது | இல்லை |
| | நிலையான நில ஆவணம் | | |
| நத்தம் | அடங்கல் | தொடங்கப் படவுள்ளது | இல்லை |



## (iii) வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டவை (மாற்றியமைக்கத்தக்கவை)

| ஆவண வகை | ஆவணத்தின் பெயர் | கணினிப்படுத்தப்பட்டவை | இணையவழி சேவைக்கு கொண்டுவரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமம் | புலப்பட புத்தகம் (நத்தம் உள்ளிட்டவை) | 55.01* இலட்சம் / 55.02 இலட்சம் (99.8%) | ஆம் (99.8 %) மின்சேவையில் உள்ளது |
| | கிராம வரைபடம் | 14,962 / 16,743 கிராமங்கள் (89.5%) | இல்லை |
| நகர்ப்புறம் | பிளாக் வரைபடம் | 19.91 இலட்சம் / 35.80 இலட்சம் நகரப்புல எண்கள் (56%) | இல்லை |
| | நகர புல வரைபடம் | கணினிப்படுத்தப்பட்ட பிளாக் வரைபடங்களிலிருந்து உருவாக்கப்பட்டு வருகிறது | 14 நகரங்களுக்கான நகரப் புல வரைபடங்கள் இணைய வழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. |

** 2,992 காணாமற்போன புலப்படங்கள் புதிதாக வரையப்பட்டு வருகின்றன.*

(iv) கையினால் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் – ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை (மாற்றியமைக்கத் தக்கதல்ல –பார்வையிட மட்டும்)

| ஆவண வகை | ஆவணத்தின்பெயர் | ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை | இணையவழி சேவைக்கு கொண்டுவரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமம் | புலப்படபுத்தகம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்) | 9,566 / 16,743 கிராமங்கள் (57%) | இல்லை |
| | கிராமவரைபடம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்) | 16,743 கிராமங்கள் (100%) | ஆம் |
| நகர்ப்புறம் | பிளாக் வரைபடம் (மூலநகரளவை) | 16,422 / 27,973 பிளாக்குகள் (58.7%) | ஆம் |

**(v) இணையவழிபட்டாமாறுதல்**

கிராமப்புற நில ஆவணங்களுக்கான இணையவழி பட்டாமாறுதல் திட்டம்மற்றும் நகர்ப்புற நில ஆவணங்களுக்கான



இணையவழி பட்டாமாறுதல் திட்டத்தின் கீழ் 05.04.2022 வரை 69,27,605 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 61,06,945 விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டு 28,64,117 பட்டா மாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(vi) அடிப்படைக் கட்டமைப்பு வசதி உருவாக்கம் – தற்போதைய நிலவரம்**

அ. குறுவட்ட அளவர்களுக்கான அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்: பொதுமக்கள் குறுவட்ட அளவர்களை எளிதாக அணுகும் பொருட்டும் குறுவட்ட அளவர்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரும் வகையிலும் குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஒப்பளிக்கப்பட்ட 260 குடியிருப்புகளில், இதுவரை 225 குடியிருப்புகள்

கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 35 குறுவட்டங்களில் குடியிருப்புகளை அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

ஆ. நில ஆவண மேலாண்மை மையங்கள்: ஒன்றிய அரசின் நில ஆவணங்களை நவீனப்படுத்துதல் திட்டத்தின் கீழ் 228 வட்டங்களில் நவீனபாதுகாப்புஅறை / நில ஆவண மேலாண்மை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 77 வட்டங்களில் இப்பணி நடைபெற்று வருகிறது.

இ. நில அளவர்களுக்கு தரவு அட்டைகள் வழங்குதல்: இணையவழி பட்டாமாறுதல் மனுக்களை விரைந்து தீர்வு செய்யும் பொருட்டு 264 குறுவட்ட அளவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 3G தரவு அட்டைகளின் இணைப்பு வசதியானது



கூடுதலாக ஓராண்டு காலத்திற்குப் புதுப்பித்துத் தரப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக 255 குறுவட்டஅளவர்களுக்கு 4G தரவுஅட்டைகள் வழங்கப்படவுள்ளன.

ஈ. நில அளவைப் பயிற்சி வழங்கப்படும் விவரம்: 05.04.2022 வரையில் பல்வேறு துறை சார்ந்த 25,862 அலுவலர்களுக்கு, ஒரத்தநாடு நிலஅளவைப்பயிற்சி நிலையத்தில், நிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள, நில அளவைப் பயிற்சிமற்றும் ஆராய்ச்சி மையத்தில் (CSTAR), பல்வேறு துறை சார்ந்த 4,230 அலுவலர்களுக்கு நிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

உ. பிழை திருத்த விவரம் – சிறப்பு முகாம்கள் / சிறப்பு முனைவு: அரசாணை (நிலை) எண்

644 வருவாய் மற்றும் பேரிடர் [நிநி–2(2)] மேலாண்மைத் துறை நாள் 11.10.2021 மற்றும் அரசாணை (நிலை) எண் 612 வருவாய் மற்றும் பேரிடர் [நிநி–2(2)] மேலாண்மைத் துறை நாள் 01.10.2021 – ஆகியவற்றின் படி, பட்டா தொடர்பான பொதுமக்களின் குறைகளைக் களைவதற்கும் மற்றும் நில ஆவணங்களில் உள்ள பிழைகளைத் திருத்துவதற்கும் அனைத்து கிராமங்களிலும் ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சிறப்புமுகாம்கள் நடத்தப்படுகின்றன. இதன் தற்போதைய நிலவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| இதுவரை பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | : 44,508 |
| தீர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | : 29,864 |



| | |
|---|---|
| நிலுவையிலுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | : 14,644 |

நகர நில ஆவணங்களைப் பொறுத்த வரையில், கணினிப்படுத்தப்பட்ட அனைத்துத் தரவுகளும் தொடர்புடைய நிலஆவணங்களுடன் ஒப்பிட்டு பிழைகள் களையப்படுகின்றன. இதன் நிலவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| மொத்த நகரப் புலஎண்களின் எண்ணிக்கை : | 32.64 இலட்சம் |
| ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட புலஎண்களின் எண்ணிக்கை : | 31.08 இலட்சம் |
| கண்டறியப்பட்டுள்ள பிழைகளின் எண்ணிக்கை : | 7.93 இலட்சம் |
| களையப்பட்ட பிழைகளின் எண்ணிக்கை: | 73,755 |

(vii) மறுநிலஅளவை மற்றும் நகரஅளவை – பணி முன்னேற்ற நிலவரம்

(அ) நவீன நில அளவைக் கருவிகளான வகையீட்டுப் பூகோள நிலைக்கலன் கருவி

மற்றும் மின்னணு நிலஅளவைக்கருவி ஆகியவற்றைப் பயன்படுத்தி, நடப்பு நேர இயக்கவியல் (Real Time Kinematic) தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தியங்கும் தொடர்பு நிலையங்களிலிருந்து (Continuously Operating Reference Stations (CORS)) சமிக்ஞைகளைப் பெற்று கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மறுநிலஅளவைப்பணி நடைபெற்றுவருகிறது. இதுவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 337.26 ச.கி.மீ., நீலகிரி மாவட்டத்தில் 211.25 ச.கி.மீ., மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 439.25 ச.கி.மீ., பரப்பளவிற்கு மறுநில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.



(ஆ) நவீன நிலஅளவைக் கருவிகளைப் பயன்படுத்தி பம்மல், அனகாபுத்தூர், பெரம்பலூர் மற்றும் திருத்தணி நகரங்களில் நகரளவைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நகரங்களின் நகரளவை ஆவணங்களை இணையவழி சேவைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலூர் மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் நகரளவைப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(viii) இதர முனைவுகளில் பணி முன்னேற்ற நிலவரம்

(அ) பதிவுத்துறையுடன் ஒருங்கிணைத்தல்

நிலப்பரிவர்த்தனை முடிவுற்றதும் பட்டாமாறுதல் நடவடிக்கையைத் தொடங்குவதற்காக, பத்திரப்பதிவு விவரங்கள் யாவும், இணையம் வழியாகத் தமிழ்நிலம்

மென்பொருளை வந்தடைகிறவகையில், கிராமப்புற/ நகர்புற நில ஆவணங்களுக்கான தமிழ்நிலம் இணையவழி மென்பொருளும், பதிவுத்துறையின் இணையம் சார்ந்த மென்பொருளான STAR 2.0. உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

05.04.2022வரை, 48,19,620 விண்ணப்பங்கள் இணையம் வழியாகப் பதிவுத்துறையிலிருந்து பெறப்பட்டு 42,36,035 விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டு, 20,97,272 பட்டா மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தானியங்கி பட்டா மாறுதல்

உட்பிரிவு இல்லாத நிலப் பரிவர்த்தனைகளில், நில உரிமைமாற்றங்களை தானியங்கி முறையில் பட்டா மாறுதல் நடைபெறும் முறை 2021–இல் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது மேலும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. 05.04.2022



வரையில், 1,59,600 பட்டா மாறுதல்கள் தானியங்கி முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

(இ) உரிமம் பெற்ற நில அளவர்கள்:

நிலஅளவர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, கட்டுமானப் பொறியியல் பட்டயதாரர்களுக்கு ஒரத்தநாடு நிலஅளவைப் பயிற்சி நிலையம் மற்றும் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள நிலஅளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (CSTAR) 3 மாத காலத்திற்கு நிலஅளவைப் பயிற்சி வழங்கப்பட்டு' நிலஅளவை செய்வதற்கான உரிமம்' வழங்கப்பட்டுவருகிறது. இதுவரையில் 470 பட்டயதாரர்களுக்கு நிலஅளவை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிலஉரிமம் பெற்ற நிலஅளவர்களில் 340 பேர், வருவாய்த்துறையின் இணையவழி பட்டா

மாறுதல் பணி உள்ளிட்ட, பிற அரசுத்துறைகள் / நிறுவனங்களான இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், இரயில்வே திட்டப்பணி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஆகியவற்றின் நிலஎடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**(ஈ) இணையவழி சேவையில் வரைபடங்கள்:**

நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத்துறையின் இணையதளம் (https://tnlandsurvey.tn.gov.in/) மூலமாகப் பல்வேறு வகையான வரைபடங்களை பொதுமக்கள் தரவிறக்கம் செய்து கொள்ளும் வசதி 11.10.2021 முதல்ஏற்படுத்தப்பட்டுள்ளது.



**(உ) பத்திரப் பதிவிற்கு முன்னதாகவே உட்பிரிவுகளை அங்கீகரித்தல்:**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப் பிரிவுகளில், பத்திரப்பதிவிற்கு முன்னரே உட்பிரிவுகளை உருவாக்குவதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்முறையில் உருவாக்கப்படும் உட்பிரிவுகள், மனைப்பிரிவின் உரிமையாளரின் பெயரிலேயே பதிவு செய்யப்படவுள்ளதால் வீட்டுமனைகள் பின்னர் விற்கப்படும்போது அவை தானியங்கியாகவே மனை உரிமையாளருக்குப் பட்டாமாறுதல் செய்யப்பட ஏதுவாக அமையும்.

### 6.2 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான முதன்மைத் திட்டங்கள்

i. சென்னை, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில் அமைந்துள்ள, மத்திய நிலஅளவை அலுவலகம்,

நிலவரித்திட்ட அலுவலகம், மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியரகங்கள் மற்றும் அனைத்து வட்ட அலுவலகங்களின் ஆவணப் பாதுகாப்பு அறைகளில் பராமரிக்கப்பட்டு வரும் பழமையான ஆவணங்கள் அனைத்தும் ஒளிபிம்பநகல் எடுக்கப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் ஒருங்கிணைந்து பராமரிக்கப்படும்.

ii. **புலஎல்லைஅளவைக்கானமென்பொருள்**: புல எல்லைகளை அளந்து காண்பிக்கக் கோரி பொதுமக்கள் அளிக்கும் விண்ணப்பங்களுக்கு, இணையம் மூலமாகவே தீர்வு காண்பதற்கான இணையவழி மென்பொருள் தேசிய தகவலியல் மையத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, இணையம் வழியாகப் பொதுமக்கள்



விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்–பட்டுள்ளது. விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டு புல எல்லை அளவை செய்யப்பட்டதும் தொடர்புடைய நில ஆவணங்களை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும்.

iii. **ஒருங்கிணைந்த நில ஆவணம்**: அ பதிவேடு, சிட்டா, புலப்படம், அடங்கல் ஆகிய ஆவணங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு' ஒருங்கிணைந்த நில ஆவணமாக' இணையவழி சேவைமூலமாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

iv. நகர்ப்புற நில ஆவணங்களுக்கும் தானியங்கி பட்டாமாறுதல் முறை விரிவாக்கம் செய்யப்படும்.

v. நீர்நிலை ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்காக, கடந்த ஆண்டில் தொடங்கப்பட்ட நீர்நிலைப் புறம்போக்குகளை அளவை செய்யும்பணி,

நீர்நிலைகளின் புவியிடங்காட்டும் வரைபடங்களைத் தயார் செய்யும் வகையில், தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது. நவீன நிலஅளவை முறையில் அளவை செய்யப்பட்ட நீர்நிலைப் புறம்போக்குகளின் வரைபடங்கள் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் இணையவழி சேவைக்குக் கொண்டுவரப்படும்.

vi. நில அளவைத் துறை பணியாளர்களின் உபயோகத்திற்காக, நிலம் சார்ந்த விவரங்களான பரப்பளவு, புவிஅச்சுதூரங்கள், நிலஉரிமைதாரர்கள் விவரம் ஆகியவற்றைக், குறிப்பிட்ட நிலத்திலிருந்தே காணும் வகையில் அலைபேசி செயலி ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

vii. இணைய வழியே நில ஆவணங்களைப் பராமரிப்பதற்கான கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்: அரசாணை (நிலை) எண் 17



வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை [நிநி – 2(2)] நாள் 06.01.2022–இன்படி, தேசிய தகவலியல் மையத்திற்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.130 இலட்சம் நிதியினைப் பயன்படுத்தி கூடுதல் வன்பொருட்களைக் கொள்முதல் செய்து இணையவழி நிலஆவணங்களைப் பராமரிக்கும் முறை வலுப்படுத்தப்படவுள்ளது.

### <u>6.3 நிலவரித் திட்டப் பிரிவு</u>

நிலத்தின் விளைச்சலில் ஒரு பகுதி நில வரியாக வசூலிக்கப்படும் நடைமுறை இருந்தது. பின்னர், அதன் பண மதிப்பீட்டில் வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலவரி மற்றும் நிலத்தின் உரிமையாளரை நிர்ணயம் செய்வதற்காக கடைபிடிக்கப்படும் முறை நில வருவாய் நிலவரித்திட்டம் எனப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைபாடு செய்யப்படாமல் பாசன ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல்

நிலவரி வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த முறை 'நிலையான நிலவரித்திட்டம்' என அழைக்கப்பட்டது. இந்த முறையை ரத்து செய்து நீர் ஆதாரத்தினை அடிப்படையாக கொண்ட மண் விளைச்சல் மற்றும் மண் வகைபாடு ஆகியவைகளின் அடிப்படையில் நிலவரி நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நிலவரித்திட்டம்' 1879–80–ஆம் ஆண்டிலிருந்து அசல் நிலவரித்திட்டம் (Original Settlement) என அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில், நிலவரி நிர்ணயிப்பதற்காக முதன் முதலாக அரசினால் நிலஅளவை செய்யப்பட்டு, புலவாரியாக வகைப்பாடுகள், மண்வயனம், பாசன ஆதார வகுப்புகள் நிர்ணயிக்கப்பட்டு தரம், தீர்வை நிர்ணயிக்கப்பட்டது. மேலும், புலங்களின் உரிமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பட்டா பதிவுகள் ஏற்படுத்தப்பட்டது. இம்முறை முப்பதாண்டுகள் வரை நீடிக்கத்தக்கது. அரசால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் மற்றும் நிலவுடைமைதாரர்களால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் தீர்வை வசூலிக்கப்படும் முறையை



பொறுத்து கிராமங்கள் இரு வகைகளாக பிரிக்கப்பட்டன. எனவே, அசல் நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமங்களில், மறு நிலவரித்திட்டம் (Re–Settlement) அறிமுகப்படுத்தப்பட்டது. ஜமீன்தாரர்கள்/ இனாம்தாரர்கள் ஆகியோகளிடமிருந்து நில உடமைகளில் அசல் நிலவரித்திட்டம் மற்றும் மறுநிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல், அவ்வுடமைகளில் நிலையான நிலவரித்திட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்தின்போது ஜமீன் எஸ்டேட், இனாம் மற்றும் மைனர் இனாம் இதுபோன்ற சில பகுதிகளைத் தவிர அந்நாளைய மெட்ராஸ் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

சுதந்திரம் பெற்ற பின்பு ஜமீன்/இனாம் எஸ்டேட் இதுபோன்ற பகுதிகளிலிருந்த, விவசாயிகளின் நிலவரிச் சுமையைக் குறைப்பதற்காகவும், நில உடமையாளர்கள் என்ற பிரிவினரை மொத்தமாக நீக்கி, அக்கிராமங்களை

அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகவும் பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் பெரும்பாலான சட்டங்களின் கீழ் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், பின்வரும் சட்டங்களின் கீழ் சில கிராமங்களில் மட்டும் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையிலுள்ளன:–

1. தமிழ்நாடு எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948 (தமிழ்நாடு சட்டம் XXVI/1948)

மொகலாய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் நிலவரி வசூல் செய்ய ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் முதலானோர் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு நிலவரி வசூலிப்பதற்காக மேல்வார உரிமையும் இப்பகுதிகளில் விவசாயம் செய்பவர்களுக்கு குடிவார உரிமையும் அளிக்கப்பட்டிருந்தது. இச்சட்டத்தின் மூலம் ஜமீன் மற்றும் மேல்வார இனாம் எஸ்டேட்களில் ஜமீன்தார் மற்றும் இனாம்தாரர்களின் வரி வசூலிக்கும் மேல்வார உரிமை அரசால் நீக்கப்பட்டு,



அக்கிராமங்கள் அரசின் நேரடி ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து எஸ்டேட்டுகளிலும் இரயத்துவாரி நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. எனினும், பட்டா வழங்கியது மற்றும் வகைபாடு செய்தது குறித்து சில வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையிலிருந்து வருகின்றன.

2. தமிழ்நாடு இனாம் எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963)

முன்னாள் இந்து மன்னர்கள் காலத்திலும், மொகலாய மன்னர்கள் காலத்திலும் 1802–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை படைவீரர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும், ஊழியர்களுக்கும், துறவிகளுக்கும் மற்றும் அறிவாளிகளுக்கும் நிலவரி இல்லாமலோ அல்லது குறைந்த அளவிலான நிலவரி நிர்ணயித்தோ ஊழியம் செய்வதற்காக சில கிராமங்கள் அல்லது கிராமத்தின்

பகுதிகள் வழங்கப்பட்டிருந்தன. இவை "மான்யம்/இனாம்" என அழைக்கப்பட்டு வந்தது. இனாம் வழங்கப்பட்டதற்கு ஆதாரமாக உரிமைபட்டயங்களும் வழங்கப்பட்டிருந்தன. இந்த இனாம் எஸ்டேட்டுகளில் இருந்த நில உடமையாளர்களின் உரிமையை நீக்கி அவைகளை அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், அந்த எஸ்டேட்டுகளில் இரயத்துவாரி நிலவரித்திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்களில் 6 கிராமங்களை தவிர மற்ற அனைத்து கிராமங்களிலும் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. மூன்று கிராமங்களில் நிலவரித்திட்டப்பணி நடைபெற்றுக்கொண்டுள்ள நிலையில் மீதமுள்ள கிராமங்களில் நிலவரித்திட்டப் பணியினை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



3. தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963)

ஓர் இனாமுக்கான உரிமை பட்டயத்தில் கிராமத்தின் ஒரு பகுதியை பிராந்திய நில அளவுகளான காணி ஏக்கர், செண்ட் போன்ற நில அளவுகளிலோ அல்லது மத/தர்ம நிறுவனங்களுக்கு முழு கிராமங்களாகவோ அளிக்கப்பட்ட இனாம் கிராமங்களில், இனாம்தாரர்களின் உரிமையை நீக்கவும் அவற்றில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இனாம் கிராமங்களில் ஏழு கிராமங்களை தவிர நிலவரித்திட்டப்பணி முடிக்கப்பட்டு மற்ற கிராமங்களில் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. நீதிமன்ற வழக்குகளுக்கு உட்பட்ட 1 (ஒரு) கிராமத்தை தவிர நிலவரித்திட்டப் பணிகள் 4 கிராமங்களில் நடைபெற்று வருகின்றன. மேலும், 2 கிராமங்களில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

4. தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969)

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை நீக்கவும் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. உயர்நீதிமன்றத்திலும் அதன் பின் உச்சநீதி மன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகளால் இச்சட்டத்தை முழுமையாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9–வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. கடைசியாக இச்சட்டத்தினை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9–வது அட்டவணையில் முழுமையாக சேர்க்கப்பட்டதை ஏற்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு :



| வ.எண் | விவரங்கள் | விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு | 45,101.46 |
| 3. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு | 17,014.43 |
| 4. | நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)–(2)] | 34,986.28 |

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வன செல்வங்களை பாதுகாக்கும் பொருட்டு 17,014,43 ஏக்கர் நிலம் வனத்துறைக்கு ஒப்படைக்கப்–பட்டுள்ளது.

இதற்கிடையில் மேற்படி சட்டம் பிரிவு 8, 9, 10–களின் கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நிலவரித்திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பெரும்பாலான

மனுக்கள் நிலவரித்திட்ட அலுவலரால் முடிவு செய்யப்பட்டுவிட்டன. முடிவு செய்யப்பட்ட இனங்களில் நிலவரித்திட்ட அலுவலரின் உத்தரவுகளுக்கு எதிராக ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயம்/மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலத்தில் பல மேல்முறையீடு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்ட அலுவலர் நிலப்பிரச்சணை தீர்வு செய்யப்பட்ட இனத்தில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களை மீட்க உத்தரவிட்டுள்ளார்.

கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களைத் திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில் நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக அரசாணை (நிலை) எண்.73, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (F.R.14) துறை, நாள் 19.03.2018–இல் 3 நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிந்துறையில் உள்ளது.



**திட்டங்கள்**

**(அ) நத்தம் நிலவரித்திட்டம்**

அசல் நிலவரித்திட்டம் மற்றும் மறு நிலவரித்திட்டப் பணிகளின்போது கிராமங்களிலுள்ள குடியிருப்பு பகுதி 'நத்தம்' என வகைபாடு செய்யப்பட்டிருந்தது. நத்தம் புலங்களில் வீட்டு மனைகள் உட்பிரிவு செய்யப்படாமல் மனைப் பட்டா வழங்கப்படாமல் இருந்து வந்தது. எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் இருந்த நத்தம் புலங்களிலுள்ள வீட்டு மனைகளிலும் விவசாயமில்லாத பிற பயன்பாட்டில் இருந்து வந்த விவசாய நிலங்களிலும், நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், நகராட்சி மற்றும் மாநகராட்சி–களுக்குட்பட்ட நத்தம் பகுதிகளில் நத்தம்

நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(ஆ) மலைக்கிராமங்களில் நிலவரித்திட்டப் பணி**

நத்தம் நிலவரித்திட்டப் பணியோ அல்லது நில உடமை மேம்பாட்டு பணியோ மேற்கொள்ளப்படாத மலைக் கிராமங்களில், மறு நிலஅளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணி வழக்கு நடைபெறும் 1 கிராமத்தை தவிர 6 கிராமங்களில் மட்டும் தற்போது நடைபெற்று வருகிறது.

**(இ) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நிலவரித்திட்டப் பணி**

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் வருவாய்ப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கவும் மாவட்ட வருவாய் நிர்வாக பராமரிப்பிற்கென நில



ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும் நகர நிலவரித்திட்டப் பணி தொடங்கப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றுள் 1 மாநகராட்சி 47 நகராட்சிகளில் முழுவதுமாக இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நகர நிலவரித்திட்டப் பணி 14 மாநகராட்சிகளிலும் (21 அலகுகள்) 34 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/ மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்று வரும் அலகுகளின் பணிகள் முடிக்கப்பட்டவுடன், அவ்வலகின் பணியிடங்கள் பணி தொடங்க வேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

இது வரையிலும் 16,84,704 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி**

வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 4–ன்படி, மாநிலம் முழுவதும் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு ஆணையாளராக நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரும் அவரது கட்டுப்பாட்டில், வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக மாவட்ட வருவாய் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பணி இதுவரை 30 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு மீதமுள்ள மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

**கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்**
**வருவாய் மற்றும் பேரிடர்**
**மேலாண்மைத்துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.